istered M. 878

ஓம்

4-JAN

ஞானோதயம்

பிரம்மஞ்ஞான மாதாந்தப் பத்திரிகை

பத்திராதிபர்கள்

அ. ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்., மதுரை.

சி. என். சுப்பிரமணிய ஐயர் பி. ஏ., அடையாறு.

தொகுதி 14]   1923வரு டிசம்பர்மீ 21உ   [பகுதி 6

பொருளடக்கம்

		பக்கம்
1.	தைவீசம்பத்து	... 177
2.	சிங்களர் தமிழர் ஐக்கியம்	... 182
3.	குருபதேசம்	... 186
4.	பிரஹ்மஞான சங்கங்களின் வேலை	... 189
5.	தூல சூக்கும பிரபஞ்சங்கள்	... 194
6.	நல்லாசிரியரதீ பிரதிக்ஞைகள்	... 199
7.	பாரத ஸமாஜம்	... 202
8.	பத்திராதிபர் குறிப்புக்கள்	... 204
9.	சமாசாரம்	... 205

பிரம்மஞ்ஞானத் தமிழ்ப் பிரசாரச்
...ரால் வெளியிடப்பட்டது

...0-0.]   [தனிப்பிரதி 4 அணா

QM
·N23

அடையாறு பிரஹ்மஞானத் தமிழ்ப்பிரச

சங்கம்.

மேற்படி பெயரால் ஒரு சங்கம் சென்ற வருஷம் எப்பிர
மீ ஏற்பாடாகி 1860-ஆம் வருஷத்திய 21 ஆவது ஆக்டின்ப
ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

பிரஹ்மஞானசபையில் ஆங்கிலேய பாஷையில் பிரசுரப் செய்திருக்கப்பட்ட கிரந்தங்களைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடவேண்டும் என்ற முக்கிய நோக்கங்கொண்டே அது ஸ்தாபிக்கப் பெற்றது. பிரஹ்மஞானசபை அங்கத்தினர்களே இதில் மெம்பர்களாகலாம். பத்து ரூபாய் ஒரே மொத்தமாகவோ அல்லது தவணையிலோ கொடுப்பவர்கள் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவர். அப்படியே நூறு ரூபாய் கொடுப்பவர்கள் காரிய நிர்வாகசபையிலும் அங்கத்தினராகலாம்.

நமது கிரந்தங்களை அச்சிடுவதில் ஏற்கெனவே சிரமம் தோன்றுகிறபடியால் நமக்குச் சொந்த அச்சியந்திரசாலை கூடிய சீக்கிரம் ஏற்படுத்த வேண்டும். இதற்கு ரூபா 3,000 நமக்குத் தேவை. இப்போது பிரஹ்மஞானபிரசாரக வேலைக்காக பத்து ரூபாய் கொடுக்கக்கூடியவர்கள் 300 மெம்பர்களாவது நமது தமிழ் நாட்டில் இல்லையா? காரிய நிர்வாக சபையிற்சேர்ந்த ஒவ்வொருவருக்கும் இச்சபையால் பிரசுரமான கிரந்தங்களில் ஒரு பிரதி இனமாகவும் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் புத்தகம் அரைவிலைக்கும் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறது. இதன் விவரமறிய விரும்புவோர் காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளலாம்.

ஸர். தி. ஸதாசிவ ஐயர்
அக்ராஸனர்.

எம். யஸ. கணேச ஐயர்
வக்கில், சிவகங்கை.

ஸி. என். சுப்பிரமணிய ஐயர், பி. ஏ.
பக்த விலாசம், அடையாறு.

காரியதரிசிகள்.

ஓம்

சத்தியத்திலும் சிறந்த தருமம் இல்லை

ஞானோதயம்

பிரம்மஞ்ஞான மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 14]   1923ஹூ டிசம்பர்மூ 21உ   [பகுதி 6

தைவீசம்பத்து.

1. அபயம்.

(1) பகவத்கீதையின் 16 ஆவது அத்தியாயத்தில் தைவீ ஸம்பத்து என்று விவரிக்கப்பட்டிருக்கும் 26 தைவ குணங்களில் அபயம் அதாவது பயமின்மை என்பது முதலாவது குணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

(2) பயம் இல்லாத தன்மைக்குப் பயமின்மை என்று பெயர். பயம் என்பது அன்பும் ஸகோதரபாவமும் நிகழாத இடத்தில் உண்டாகும் ஒரு மனோநிலை.

(3) மனிதர்களுக்குக் கீழ்ப்பட்ட மிருகங்கள் முதலான எல்லா ஜீவராசிகளும் பகுத்தறிவு இல்லாதவைகளாயும் சுயநயத்தையே பாராட்டுகிறவைகளாயும் அவைகளின் பலாபலத்துக்குத்தக்கபடி ஒன்றை மற்றொன்று இம்சிப்பவைகளாயும் கொன்றுதின்பவைகளாயுமிருப்பதால் எந்தப் பிராணியிடமிருந்து தங்களுக்கு எந்தச்சமயம் என்ன தீங்கு நேருமோ என்கிற பயம் அவைகளுக்கு இயல்பான குணம்.

(4) விசாக முறையில் மிருகசரீரம் போய் மானிடசரீரம் வாய்த்தபின் கூட மனிதனுக்கு விவேகம் ஏற்படுகிறவரையில் மிருகங்களைப் போலவே அவனும் பிறருடைய உடைமைகளை பலாத்காரமாய் கவர்ந்து கொள்ளுவதிலேயே நோக்கமுள்ளவனாயிருக்கிறான். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் தன்னைக் காட்டிலும் புத்தியிலாவது, பக்தியிலாவது, செல்வத்திலாவது மேலானவனைக்கண்டு தனக்கு எந்தச் சமயம் என்ன தீங்கு விளைவிப்பானோ என்று பயப்படுகிறான்.

(5) தான், தன் சரீரம், தன் மனைவி, தன் மக்கள், தன்வீடு, தன் செல்வம் என்ற அகந்தையும் மமதையும் மனிதனுக்கு உள்ள வரையில் மிருகத்துக்குரிய பயம் என்னும் குணம் ஒரு போதும் அவனை விட்டு நீங்காது.

(6) இந்திரிய போகத்தில் அபிமானமுள்ளவன் ரோகம் வந்து விஷயசுகம் போய்விடுமோ வென்றும், சௌந்தரியத்தில் அபிமான முள்ளவன் கிழத்தனம் வந்து அழகுபோய் விடுமோ வென்றும், பெண்டு பிள்ளைகளிடத்தில் அபிமான முள்ளவன் மரணம் வந்து அவர்களுடைய ஸஹவாசம் போய்விடுமோ வென்றும் செல்வத்தில் அபிமானமுள்ளவன் திருடர்கள் வந்து தன் செல்வம் போய் விடுமோவென்றும் இவ்வாறு மனிதன் பூமியில் உள்ள எல்லாவஸ்துக்கள் விஷயமாகவும் பயத்திலேயே முழுகிக்கிடக்கிறான்.

(7) போய்விடுமோ என்கிற பயமே அநித்யமான வஸ்துக்களின் விஷயமாகத்தான் உண்டாகக்கூடியது. அநித்யமான வஸ்துக்களில் ஆசை இருக்கும்வரை பயமும் இருக்கும். ஆகையால் எது நித்யம் எது அநித்யம் என்கிற விவேகம் மனிதனுக்கு வந்து அநித்ய வஸ்துக்களில் பற்றின்மை ஏற்படுகிற வரையில் பயம் அவனை விட்டு எப்படிப் போகும்? பற்றின்மை அதாவது வைராக்கியம் வந்தவுடன் சுயநயம் பெறுதல் என்னும் குணம் மாறிப்போய் அன்பும் ஸகோதரபாவமும் பெருகும். பயம் போய்விடும்.

(8) பயம் போகாதவரையில் பக்திமார்க்கத்தாலோ, ஞான மார்க்கத்தாலோ, கர்மமார்க்கத்தாலோ யோகத்தை அடைதல் சாத்தியப்படாது. பகவத்கீதையில் பக்தியோகத்தைப்பற்றிச் சொல்லுமிடத்தில் உலகத்தைக் கண்டு எவன்பயப்படவில்லையோ, எவனைக்கண்டு உலகம்பயப்படவில்லையோ அவனே பக்தன் என்றுசொல்லப்பட்டிருக்கிறது. அதுபோலவே ஸாங்கிய

யோகத்தைப்பற்றிச் சொல்லுமிடத்தில் ஆசையும், கோபமும் பயமும் நீங்கினவனே ஸ்திதப்பிரஞ்ஞன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேமாதிரி கர்மயோகத்தைப்பற்றிச் சொல்லுமிடத்தில் எவனும் தான் செய்யும் காரியம் தன்னுடைய கோரிக்கைப்படி ஒருக்கால் சித்திக்காமல் போய்விடுமோ என்று பயப்படாமலும் இந்தக்காரியத்தை தான் செய்தால் ஜனங்கள் ஒருக்கால் தன்னை புகழமாட்டார்களோ என்று பயப்படாமலும் தன்னுடைய மனச்சாக்ஷியை அநுசரித்துச் செய்யத்தகுந்த காரியத்தைச் செய்யவேண்டியதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

(9) ஆகவே பயம் போகவேண்டுமானல் பற்றின்மை வரவேண்டுமென்றால் அந்தப் பற்றின்மையை ஸம்பாதிப்பதெப்படி?

> "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
> பற்றுகபற்று விடற்கு"

என்றபடி பற்றற்ற பெரியோர்களுடைய பற்றை ஸம்பாதிக்க வேண்டும்.

(10) அவர்களுடைய பற்றை அடைவதற்காக மனிதன் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடிப்போக வேண்டியதில்லை. அந்தப் பெரியோர்கள், பிரம்மம் ஆனந்த ஸ்வரூபம் என்றும் தான் அந்த பிரம்மம் என்றும் ஸ்வானுபவம் வந்தவர்கள். எதற்கும் பயப்படாதவர்கள். சோகமோகங்களை விட்டவர்கள். பரமசாந்தர்கள், யாராவது ஒரு மனிதன் பிரவிருத்தி மார்க்கத்தில் மேன் மேலும் செல்லாமல் அசுரகுணங்களை ஒவ்வொன்றாக விலக்கி நிவிருத்தி மார்க்கத்துக்குத் திரும்பமாட்டானா என்று எப்போதும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மலையின் சிகரத்தில் உள்ள ஒருவனுக்கு அந்த மலைச்சரிவில் இருண்ட பள்ளத்தாக்குகளில் எங்கேயாவது ஒரு சிறு விளக்கு எற்றினால் எப்படி பளீர் என்று உடனே அவனுடைய கண்ணுக்குத் தட்டுப் படுமோ அப்படியே உன்னத நிலைமையிலுள்ள அந்தப்பெரியவர்களுக்கு அஜ்ஞானமும் தமோகுணமும் மற்ற அசுரகுணங்களும் நிறைந்த இவ்வுலகில் யாராவது ஒருவன் நிவிருத்தி மார்க்கத்துக்கு திரும்புகிறான் என்றால் அவன் உடனே அவர்களுடைய கருணாகடாக்ஷத்துக்குப் பாத்திரனாய் விடுகிறான். அது முதல் அவன் விஷயத்தில் அவர்கள் விழிப்பாயிருந்து அவனுடைய பயங்களைப் போக்கி அவனை மேன் மேலும் கைதூக்கி விடுகிறார்கள். அவர்களுக்கு அதைத்

தவிரவேறு வேலை இல்லை. வெகுகாலமாய்ப் பிள்ளை இல்லாத ஒருவனுக்கு ஒரு ஸத்புத்திரனுண்டானால் எவ்வளவு ஸந்தோஷம் உண்டாகுமோ அதைக்காட்டிலும் அதிக ஸந்தோஷம் தங்களுடைய மார்க்கத்துக்கு ஒருவன் வருவதாயிருந்தால் அந்தப் பெரியவர்களுக்கு உண்டாகிறது. அவர்களையே சரணம் என்று அடைந்தவர்களுடைய யோக க்ஷேமங்களை அவர்களே கவனித்துத் தாங்குகிறார்கள்.

(11) அப்படிக்கெல்லா மிருந்தும் அவர்களுடைய பெருமை மனிதனுடைய ஸ்தூலதிருஷ்டிக்குப் புலப்படாதபடியால் அவனுக்கு எளிதில் அவர்களைப்பற்றி நம்பிக்கை வருகிறதில்லை. ஆனால் அப்படிப்பட்ட பெரியவர்கள் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் அபாரஞானமும் சக்தியுமுள்ளவர்களென்றும் தங்களை நம்பினவர்களைக் கைவிடமாட்டார்களென்றும் ஒருவனுக்கு உண்மையான நம்பிக்கை எந்த நிமிஷம் வருகிறதோ, அந்த நிமிஷமே பயம் என்பது இருந்தவிடம் தெரியாமல் பறந்து போகும்.

(12) புஸ்தகவாயிலாகப்படித்தும் பிறர் சொல்லக்கேட்டும் ஒருவன் அடைந்த கேவலமான ஞானத்தை உண்மையான நம்பிக்கை என்று சொல்லமுடியாது. தன்னுடைய உடல்பொருள் ஆவியாவற்றையும் அவர்களுக்கே மனப்பூர்வமாய் அர்ப்பணம் செய்து தன்னுடைய கர்மசேஷத்துக்கும் பரிபாகத்துக்கும் தககபடி தனக்கு எதுஹிதமோ அதை அவர்கள் செய்வார்கள் என்று பூர்ணமாய் நம்பியிருந்தால் தான் உண்மையான நம்பிக்கையாகும்.

(13) பாண்டவர்களும் மற்றும் அனேக பெரியோர்களும் உள்ள சபையில் துர்யோதனாதிகள் திரௌபதியை அவமானப்படுத்த வேண்டித்துயில் உரியும் காலத்தில் அந்தப் பெண்மணி மானபங்கம் வந்து விடுமோ என்று மிகப்பயந்து, தான் உடுத்தியிருக்கும் வஸ்திரத்தின் முடிச்சைத்தன் இருகைகளாலும் பலமாய்ப் பிடித்துக் கொண்டு எவ்வளவோ ஸ்ரீகிருஷ்ணனை தியானித்து மானஸம்ரக்ஷணம் செய்யும்படி கதறிப்பிரார்த்தித்தும் பயன்படவில்லை. ஏன்? தன்னுடைய கைகளின் பலத்தையும் சிறிது நம்பி வஸ்திரத்தைப் பிடித்துக் கொண்டிருந்தபடியால் அது பூர்ணமான நம்பிக்கை யாகவில்லையாம். பிற்பாடு தன்கைபலத்தில் நம்பிக்கையை விட்டு இனித்தன்னலாவது ஒன்று மில்லை யென்றுகண்டு வஸ்திரத்தைப்பிடித்திருந்த தன் இருகைகளையும் உயரத்தூக்கி வேறு ஒருகதியும் இல்லா

தவளாய் ஸ்ரீகிருஷ்ணனையே பூர்ணமாக நம்பிப்புலம்பவும் அவளுடைய பயத்தைப் போக்கி வஸ்திரம் அக்ஷயமாய் வளரும் படி அனுக்கிரகம்செய்து மான ஸம்ரக்ஷணம் செய்ததாக இதிஹாஸக்கதை கேள்விப்பட்டிருக்கிறோம்.

(14) உண்மையான நம்பிக்கையால் பயமின்மை வருகிறதென்பதற்கு பக்த சிகாமணியான பிரஹ்லாதர் ஒரு நல்ல உதாஹரணம். மகாவிஷ்ணுவை எதிரி என்று பாராட்டக் கூடிய பராக்கிரமம் வாய்ந்த தன் அருமைத் தகப்பனும் குலகுருவான சுக்கிராசாரியர் முதலானவர்களும் ஸ்ரீமந்நாராயணன் நமஸ்கரிக்கக்கூடிய யோக்கியதையற்றவன் என்று எவ்வுளவோ நயந்து சொல்லியும் கேளாத படியால் அவரை மலையிலிருந்து உருட்டிவிட்டும், கடலில் வீழ்த்தியும் விஷபானம்செய்வித்தும், பாம்புயானை முதலான துஷ்டஜந்துக்களைக் கொண்டு இம்சித்தும் பின்னும் அனேக விதமாக அவரைக் கொல்லயத்தனித்ததில் ஸ்ரீமந்நாராயணனை அவர் உண்மையாய் நம்பினவர் ஆனபடியால் கொஞ்சம்கூட பயப்படாமல் எல்லா தண்டனைகளுக்கும் சந்தோஷமாய் உட்பட்டார். அந்த ஒவ்வொரு ஆபத்திலிருந்தும் அவர் காப்பாற்றப்பட்டார் என்றும் புராணக்கதை கேள்விப்பட்டிருக்கிறோம்.

(15) அப்படி உண்மையான நம்பிக்கை மனிதனுக்கு வராமலிருப்பதற்கு முக்கிய காரணம் அவனுடைய அகந்தைதான். அந்த அகந்தை போனால் ஒழிய அப்படிப்பட்ட பெரியவர்கள் இருக்கிறார்கள் என்றே ஒப்புக்கொள்ளமாட்டான். அகந்தையை நீக்கிப்பெரியவர்களைத் தெரிந்து அவர்களுடன் இணங்கி அவர்கள் யாதொரு பிரதிப்பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் லோகஸங்கிரகத்தின் பொருட்டு இடைவிடாமல் உழைத்துவருவதைப் பார்த்துப்பார்த்துச் சிறுகச்சிறுகத்தன் மமதையை விட்டுதான் சுயநயத்தைக் கருதாமல் அவர்களைப்போல ப்பிறருக்கு உழைத்தலையே விரதமாகக் கொண்டு வேலை செய்யச் செய்ய அன்புபெருகித் தான் வேறு இந்த லோகம் வேறு என்ற வேற்றுமை புத்தியும் ஒழிந்து போகும். அதன் பின் பயம் ஏது? யாரைக்கண்டு யார் எதற்காக பயப்படுகிறது? இது தான் அபயம் அல்லது பயமின்மை என்னும் நிலை. அபயம் என்ற ஒருகுணம் வர மற்ற எல்லா தைவகுணங்களும் சுலபமாய் வரும்.

வி. விசுவநாதய்யர்.
ஹைகோர்ட் வக்கீல், மதுரை

சிங்களர் தமிழர் ஐக்கியம்.

நாம் நமது சரித்திரங்களை ஆழமாய் ஆராய்ந்து பார்க்குமிடத்து நம் முன்னோர் அரசியல், பொருளீட்டல், சனசமுதாயக் கொண்டாட்டம் முதலிய இத்துறைகளில் செய்துவந்த எக்கருமங்களும் நமது சமயக்கோட்பாடுகளுக்கிணங்கவே நடந்தேறினவென வறிகிறோம். ஆனால் இந்தக் காலத்திலோ அரசியல் விஷயங்களும் மற்றும் பொது முயற்சிகளும் சமய ஆதரவின்கீழ் நடைபெறுகிறதில்லை. எங்கே பார்த்தாலும் ஒரு தேசத்தின் நன்மை, தீமை, செல்வம் செல்வாக்கு, ஆதிய இவை, அங்கே சனத்தலைவரென்றிருப்போரின் சுயநயத்துக்கும் பேரவாவிற்குமே பலியாகின்றன. நமது சாதியத் தேர்ச்சிக்கு அத்தியாவசிய அம்சமாகிய ஐக்கியம் மனிதராலாக்கப்பட்ட உடன்பாடுகளிலும் பொருத்தங்களிலுமே தங்கியிருக்கின்றது. ஆதலால் சிங்களருக்குந் தமிழருக்கும் சனசமுதாய விஷயங்களிலும் அரசியல் விஷயங்களிலும் நெடுங்கால ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின் எல்லா உயிர்த்தோற்றங்களிலும் ஒரே ஜீவன் (இறைவன்) தான் நிறைந்திருக்கிறானென்னும் உண்மையை யுணர்ந்து ஆன்ம சம்பந்தமான ஓர் ஐக்கியத்தைத் தேடவேண்டும்.

பல சாதியாரையும் பல வகுப்பாரையும் ஒற்றுமைப்படுத்துவது அவர்கள் தேசத்தின் இயற்கை அமைப்பும், பொதுச் சரித்திரமும், பொதுச் சீர் திருத்தமும், பொது நன்மை தீமைகளுமே.

இலங்கையின் இயற்கை அமைப்பை நோக்குங்கால் சிங்களர் மாத்திரம் அல்லது தமிழர் மாத்திரம் ஒரு பெருஞ் சாதியாராகமாட்டார். ஏனெனில் தமிழர் இலங்கையில் பலபாகங்களிலும் அங்குமிங்குமாய்ச் செறிந்திருக்கிறார்கள். மேலும் இலங்கையை வடக்குத் தெற்காகப் பிரிப்பதற்கு இயற்கை அமைப்பில் ஆறு, மலைத்தொடர் முதலிய தடைகளில்லை. ஒரே தேசத்தில் உண்மையில் வேறுவேறான பலசாதியார் உடன்சீவிக்கமாட்டாரென்பதைச் சரித்திரங்களாலறிகிறோம். எப்படியெனில் இங்கிலாந்தில் வசித்த கெல்ற்றியர் (Celts) சாக்ஸனியர் (Saxons) டேனியர் (Danes) நோர்மனியர் (Normans) எனப்பட்ட இப்பல சாதியாரும் ஒன்றுபடும் வரையில் இங்கிலாந்தில் உண்மையான சாதியம் இருந்த

தில்லை. இத்தாலியிலும் ஜெர்மனியிலும் நடந்த சமீப சம்பவங்களிலிருந்தும் மேற்படி உண்மை தெளிவாகின்றது.

"சிங்களருந் தமிழரும் என்றென்றைக்கும் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தார்கள். அவர்களுக்குப் பொதுவான ஒரு சரித்திரமுண்டா?" என்பர் சிலர். ஆனல் சிங்களருக்குந் தமிழருக்குமிடையில் நடந்த யுத்தங்கள் டஸ்கனியருக்கும் (Tuscans) நீயோப்பொலிற்றனியருக்கும் (Neopolitans) அல்லது ஹனவீரியருக்கும் (Hanoverians) பிரஷியருக்குமிடையில் (Prussians) நடந்த யுத்தங்களிலும் மோசமானவையா? ஒரு பெருஞ்சாதி (Nation) தோற்றுவதற்குப் பலசிறு சாதியார் (peoples) யுத்த மெனுங் கம்மாலையில் உருக்கப் பட்டுப்போர்க்களமெனும் பட்டடையில் அடிக்கப்படுகிருர்களென்றும், இவ்வித கருமங்களே சாதியத்தைப் பிறப்பிக்கின்றன வென்றும், இந்தச் சாதிய எண்ணம் (idea of Nation) பரவ அந்தச் சிறு சாதியார் ஒவ்வொருவர் பக்கத்திலும் நிகழ்ந்த வீரச்செயல்கள் பின் தோன்றும் அத்தனிப் பெருஞ்சாதியாரின் பொதுப்பெருமைக்குக் காரணமாகின்றனவென்றும் அனிபெசன்ட் அம்மையார் சொல்லுகிருர். ஆகவே தமிழர் எல்லாரும் துட்டகெமுனுவையிட்டும் பராக்கிரம பாகுவையிட்டும் சிங்களர் எல்லாரும் ஏளாளனை (எலேலன்) யிட்டும் பெருமை பாராட்ட வேண்டும். சிங்களர் தொகை இலங்கைக் குடிசன முழுத்தொகையில் முக்காற் பங்காயிருக்கிறபடியால் சிங்களர் தாமே உண்மையான இலங்கை வாசிகளென்றும் தேச ஆட்சிக்குக் கூடிய உரித்துத் தமக்கேயுளதென்றும் ஒரு வேளை சொல்லக்கூடும். ஆனல் சரித்திர நீதிப்படி அது அப்படியல்ல. நோர்மனியர் சாக்ஸனியரை வென்ருர்கள். ஆனல் எண்ணூறு வருஷங்களின் பின் "சாக்ஸனியரும் நோர்மனியரும் டேனியரும் நாம்" என்று டெனிசன் (Tennyson) புலவர் பாடுகிருர்.

நமக்குச் சமீபமாயுள்ள ஓர் உதாரணத்தை எடுத்துப் பார்ப்போம். இந்திய சரித்திரத்தைப் பெரிதாக்குவதற்குக் காரணராயுள்ள மகமதியர் தாம் மோகாலியர், ஆபுகானிஸ்தர், துருக்கியரென்ற பேதமின்றி இந்துக்களைப் (Hindus) போலத் தாமும் இந்தியாவைத் தமது தாய்த் தேசமென்று உரித்தாடித் தம்மையும் இந்தியராக மதித்து நடக்கிருர்கள். தற்சமயம் இந்தியர் எவரும் அவர்கள் உரித்தை மறுக்கமாட்டார்.

சிங்களருக்குந் தமிழருக்கும் பொதுவான ஓர் சீர்திருத்த முண்டு. ஸ்ரீ. ஆநந்தக் குமாரஸ்வாமி அவர்கள் சொல்லுகிறதாவது: "இலங்கை பாளி இலக்கியத்திற்கும் தக்ஷிண பௌத்த மதத்திற்கும் ஒப்பற்ற ஓர் களஞ்சியம். அது தன்னகத்தே சிதைவில்லாத தொடர்பான சரித்திரங்களை யமையப் பெற்றிருப்பதால் இந்திய சரித்திரங்களில் நிச்சயிக்கக்கூடாத சில காலங்களை (மனம் போகிற வண்ணம்) நிச்சயிக்க ஒரு பெருந் தடையாயிருக்கிறது. சிங்களருடைய சில்ப சித்திர, சாஸ்திரங்களையும் சமயத்தையும் சாதியக்கட்டையு முற்று நோக்குமிடத்து, பழைய இந்துக்கள் (Hindus) சீர்திருத்தங்களின் சில அம்சங்கள் கண்முன் தோற்றினாற் போற் புலப்படுகின்றன. இந்தவிதமாக இந்தியாவி லெப்பகுதியிலுங் காணமுடியாது. இராமபிரானதும் சீதாபிராட்டியினதும் காதல் சம்பவங்களை விவரிக்கும் இந்தியரின் சிறந்த இதிகாசம் இந்தியரொவ்வொருவரின் மனதிலும் இந்தியாவையும் இலங்கையையும் ஒன்றுபடுத்துகிறது". இந்தியன் அல்லது இந்து என்ற சொல்லுக்குப் பதிலாகத் தமிழன் என்ற சொல்லைப் பாவித்து விட்டால் சிங்களரினதும் தமிழரினதும் சீர்திருத்தத்தின் ஒற்றுமை தெள்ளிதில் விளங்கும். சிங்கள அரசர் காலத்தில் சிங்கள வாலிபன் ஒருவன் படித்துச் சீர்திருந்தினவன் என்ற பட்டத்தைப் பெறுவதற்குத் தமிழையும் படித்து முடிக்க வேண்டியவனுயிருந்தான். முன் போலத் தற்காலத்திலும் சிங்களர் தமிழையும் தமிழர் சிங்களத்தையும் படித்து இரண்டு சாதியாரையும் பிரிக்கும் இந்தப் பாஷை இடையூற்றை நீக்குவதே நலம்.

சிங்களருந் தமிழரும் அரசியல் விஷயங்களிலும், சனசமுதாய விஷயங்களிலும், பொருளீட்டலிலும் பொது விருப்பமுடையவர்களாயிருக்கிறார்கள். ஏனெனில் இவைகள் ஒரு சாதியாரின் அல்லது ஒரு வகுப்பாரின் விசேஷ உரிமைப் பொருள்களல்ல. ஆனல் அவை எல்லா இலங்கை வாசிகளுக்கும் பொதுவான பரவணியாஸ்தி.

சமயமும் பாஷையும் இரண்டு சாதியாரையும் ஒற்றுமைப் படுத்தக் கூடாத அவ்வளவு வித்தியாசமுடையனவெனலாம். சுவிற்சர்லாந்தில் மூன்று வித்தியாசமான பாஷைகளும் அயர்லாந்தில் இரண்டு வித்தியாசமான பாஷைகளும் பேசப்படுகின்றன. எனினும் அவர்கள் ஒருமித்த சாதியாராகவே

ஒழுகுகிறார்கள். நாற்பத்தேழு பிரதானமான பாஷைகளுக் குறைவிடமான இந்தியாவும் இந்து பிரித்தானிய பிரஜாதிபத்திய நாடுகளிலொன்றாகி ஒரு தனிச் சாதியத்தையே தேடுகிற பக்குவத்திலிருக்கிறது. மேரி ராணி புரொட்டெஸ்டான்று கிறிஸ்தவர்களையும் எலிஸ்பெத் ராணியும் குரொம்வெலதிபரும் (Cromwell) ரோமன் கத்தோலிக்கரையும் வதைத்தனர். ஆனால் இன்றைக்கோ கத்தோலிக்கரும் வெஸ்லியன், அங்கிளிக்கன் கிறிஸ்தவர்களும் ஒரு பெருஞ் சாதியாரின் அங்கத்தவர்களாக ஒழுகுகிறார்கள். "நான் ஒரு இந்தியன்" எனவே இந்துக்களும், மகமதியரும் பெருமை பாராட்டிக் கூவுகின்றனர். நிறவித்தியாசத்தால் அமரிக்காவிலுள்ள கறுத்தவர்கள் ஏனையசாதியாரிலிருந்தும் வேறாக எண்ணப்படுகிறார்கள் என்றாலும் அவர்களும் அமரிக்க சாதியாரின் ஒரு அங்கமே, ஒரு பெருஞ்சாதி (Nation) உண்டாவதற்கு பாஷை, வர்க்கம், சமயம், நெடுங்காலமாக அநுட்டிக்கப்பட்டு வந்த சாதிக்கட்டுப்பாடு, இனப்பிரிவு முதலிய இவையாவும் இடர்களாகமாட்டா வென்பதை மனிதர் அநுபவத்திலேயே கற்றுக் கொள்ளுகிறார்கள்.

நம்முடைய தசைகளைத் திரட்டித் தேகத்தைப் பலப்படுத்துகிறதற்கு டம்பெல்ஸ் (Dumb- bells) எனப்படும் இயந்திர தேகாப்பியாசந் தேவையாயிருப்பதுபோல் இலங்கையிலிருக்கும் இந்த இரண்டு சாதியாரையும் ஒன்றாகத் திரட்டி ஒற்றுமைப்படுத்துவதற்குச் சிறு சண்டைகளும் வித்தியாசங்களும் கூட கடைசியில் சாதகங்களாகவே ஆதலால் நாம் அநுகூலமடைவதையிட்டு அவநம்பிக்கைகொள்ள வேண்டாம்.

சிங்களருந் தமிழருமாயுள்ள நாம் நமக்கிடையிலிருக்கும் பகை, பொறாமை, வெறுப்பு, பிரிவினை முதலியவற்றைமறந்து, உலக சீர்திருத்தத்திற்கும் உலகவிருத்திக்கும் நாமும் நமது பங்கை உபகரிக்கக்கூடிய சிலாக்கியத்தை அநுபவிக்கிற இலங்கைவாசிகளென்ற பெரிய சாதியாராவதற்கு, கஷ்டங்களிருந்த போதிலுங் கவனியாது, ஒருவரோடொருவர் அளவளாவித் தோழராய் நடப்பேமாக. தியாகம், தொண்டு, இணக்கம், இரக்கம் ஆதிய இவையே இலங்கைச்சாதியாரின் மகுடத்தில், சாதிவித்தியாசங்களால் நாநா திசைகளிலுமுண்டாகும் அந்தகாரத்தை தமது ஒளியினாலும் காந்தியினாலும் அகற்றக் கூடிய அவ்வளவு பிரபைவாய்ந்த செழுமணிகளாக விருக்க வேண்டும்.

இலங்கை ஸர்வஜன சோதரத்துவ ஸபையார்.

குருபதேசம்.

II நிராசை

அநேகருக்கு நிராசையைச் சாதனம் செய்வது கஷ்டமாய் இருக்கிறது. ஏனெனில் அவர்கள் தமது ஆசைகளே தாம் என்று உணருகிறவர்கள். அவர்கள் ஆப்தமாகக் கொண்ட ஆசைகளையும் விருப்பு வெறுப்புக்களையும் அகற்றிவிட்டால் தம் இருப்பே போய்விடுமென் றெண்ணுகிறார்கள். ஆனால் இவர்கள் குருதேவரைத் தரிசிக்காதவர்களே; ஜ்வலிக்கும் அவருடைய பரிசுத்த ஸந்நிதியில் இருக்கும்போது அவரைப் போல் ஆக வேண்டுமென்கிற விருப்பத்தைத் தவிர மற்றஎல்லா ஆசைகளும் நசிக்கின்றன. எனினும் அவரை நேரே தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கு முன்னேயே நீ திர்மானித்தால் நிராசையை அடைதல் கூடும். அநேகர் இச்சிக்கும் செல்வம், அதிகாரம் முதலியன வெல்லாம் அடையத் தகுந்தவைகளல்லவென்பது விவேகத்தால் நீ முன்னமே தெரிந்து கொண்ட விஷயம். இதை வார்த்தையில் சொல்வது போதாது. யதார்த்தமாய் உணரவேண்டும். அப்போது அவற்றின் மேல் எல்லா ஆசையுமற்றுப்போம்.

இது வரைக்கும் சொல்லிய தெல்லாம் இலகுவே. நீ தெரிந்து கொள்வது தான் வேண்டும். ஆனால் சுவர்க்கம் அடையவோ மறு பிறப்பின்றி மோக்ஷம் பெறவோ எண்ணி உலக வியாபார இச்சைகளை ஒழிப்பவர் சிலர். இத் தவறுதலுக்கு நீ ஆளாகப்படாது. நீ முற்றும் தன்னை மறந்தவனாயின், எப்போது மோக்ஷம் அடைவேன்? எவ்வித ஸ்வர்க்கம் கிடைக்கும்? என்று நீ எண்ணிக்கொண்டிருக்க முடியாது. சுயநலமுள்ள இச்சை யாவும் அதன் நோக்கம் எவ்வளவு மேலானதாக இருப்பினும் உன்னைப் பந்தப்படுத்துமென்பது உன் ஞாபகத்திலிருக்கட்டும். அதை நீ ஒழிக்கும் வரையில் குருதேவருடைய கைங்கரியத்திலேயே ஈடுபட்டுழைக்கப் பூர்ணஸ்வாதீனம் உனக்கில்லை.

தன்னைப் பற்றிய ஆசைகள் எல்லாம் போய் விட்டாலும் உன் காரியத்தின் பலனைப்பார்க்க உனக்கு விருப்பமிருக்கும். நீ யாருக்காவது உதவி செய்தால் என் உதவியால் அவர் பயன் பெற்ற தெவ்வளவு என்றறிய இச்சிக்கிறாய். மேலும் அவனும் அதை அறிய வேண்டும் நன்றி காட்டவேண்டும் என்ற இச்

சையும் ஒரு வேளை இருக்கிறது. ஆனல் இதுவும் ஆசையே. நம்பிக்கை இல்லாமையுங்கூட இதில் சேருகிறது. நீ உதவி செய்ய உன் சக்தியைப் பொழிவாயானல் உனக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் பலன் இருந்தே தீரவேண்டும். (கர்மம் என்னும் ஈசுவர) நியதி இவ்விதமே என்றறி. ஆகையால் நீ பலனை எதிர்பார்க்காமல் நியாயத்தை உத்தேசித்தே நியாயமாய் நடக்கவேண்டும். நீ வேலை செய்ய வேண்டியது வேலையை உத்தேசித்தேயல்லாது அதன் பலனைப் பார்க்க உத்தேசித்தல்ல. உலகத்தின் கண் உனக்கு அன்பு இருப்பதால், நீ உலக கைங்கரியத்துக்கு உன்னை அர்ப்பணம் செய்துகொள்ளல் வேண்டும். ஏனெனில் நீ அப்படியிராமல் தீராது.

நீ சித்திகளுக்கு ஆசைப்படாதே. உனக்கு அவைகள் வேண்டியது நனமையெனக் குருதேவர் அறியுங்கால் அவை உனக்கு வரும். பக்குவம் வருமுன் அவைகளைத் தூண்டுதல் பலகாலும் அல்லலை விளைவிக்கும். தவிர வஞ்சகமான பிரகிருதி தேவதைகள் இவ்வித சித்தர்களுக்குப் பலகாலும் தப்பு வழியைக் காட்டும். அல்லது சித்தி பெற்ற அவர்கள் கருவமடைந்து தாங்கள் தப்புச் செய்யமாட்டாதவர்களென்றும் நினைக்கிறார்கள். பக்குவகாலம் வரும்போது ஸித்திகள் தாமாகவே வரும், வந்தே தீரும். சீக்கிரமே அவைகளுனக்குக் கிடைப்பதால் பயனுண்டென்று குருதேவர் கண்டால் அவைகளை நீ ஸாவதானமாய்ப் பெறல் எப்படியென்றுரைப்பார். அது வரையில்அவைகள் இல்லாததே உனக்கு நல்லது.

தினசரி வாழ்க்கையில் ஸாதாரணமாயுள்ள சில அற்ப ஆசைகளும் உன்னிடத்தெழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நீ சமர்த்தனைக் காட்டிக் கொள்ளவாவது, பெருமையாய் மதிக்கப்பெறவாவது ஆசைப்படாதே. மிதமாய்ப் பேசுதலே நல்லது. நீ சொல்ல விரும்புவதில் ஸத்தியமும் பிரியமும் ஹிதமும் உண்டென்பது உனக்கு முற்றிலும் நிச்சயமாயிருந்தாலொழிய மௌனமே நல்லது. நீ சொல்லப்போவதில் இம் மூன்று குணங்களும் உள்ளனவாவென்று நீ பேசுமுன் நன்ருய் ஆலோசித்துப் பார், இல்லையானல் பேசாதே.

இப்போது முதலே நீ நன்கு ஆலோசித்துப் பேசும் வழக்கத்தில் ஏற்படுவது நல்லது ; ஏனெனில், நீ தத்துவோபாதேச தீக்ஷை பெறவரும் சமயம், உனது வார்த்தை ஒவ்வொன்றையும் நீ கவனிக்க வேண்டிவரும். இல்லாவிடில், சொல்லக் கூடாததை நீ சொல்லிடக்கூடும். மிக்க சாதாரணப் பேச்சு

அநாவசியம் ; அது மூடத்தனமுமாம் ; அது வம்புப்பேச்சாகி விட்டால் பாபகரமாகிறது. ஆகையால், நீ பேசுவதைவிடக் கேட்க பழகு ; நேரே விரும்பினாலன்றி நீ அபிப்பிராயம் கொடாதே. அறிதல், துணிதல், தீர்மானித்தல், மௌனமாயிருத்தல், இவைகளைச் சாதனங்களாகச் சொல்வதும் ஒரு முறை ; இந்நான்கில், கடைசியானது எல்லாவற்றிலும் கஷ்டமானது.

நீகண்டிப்பாய் அடக்கவேண்டிய மற்றொரு சாதாரண இச்சை எதுவென்றால், பிறர் வேலையில் தலையிட விரும்புதல், இன்னொருவன் என்ன செய்தாலென்ன, என்ன சொன்னாலென்ன, எவ்வித அபிப்பிராய முள்ளவனானாலென்ன ; இவைகள் உன்னுடைய காரியங்களல்ல ; அவைகளில் ஒரு விதத்திலும் சம்பந்தப்படாமல் நீ இருக்கப்பயிலவேண்டும். எவனும் வேறொருவனுடைய சோலியில் தலையிடாதவரை தன்னிஷ்டப்படி நினைக்கவும் பேசவும், செய்யவும் அவனுக்குப் பூர்ண ஸ்வாதீனமுண்டு, உனக்குச் சரியென்று தோன்றுகிறதை உன் ஸ்வேச்சைப்படிசெய்ய உரிமை பாராட்டுகிறாயல்லவா ? இந்த உரிமையை அவனுக்கும் நீ அளிக்கவேண்டும். அதை அவன் பாராட்டும்போது, அவனைக்குறித்துப் பேச உனக்கு நியாயமில்லை. அவன் தப்பி நடக்கிறானென்று நீ நினைத்தால் அதைத் திருத்த நீ சமயம் பார்த்து உபாயந்தேடி, தனிமையாய், மரியாதை தவறாதுபேச முடியுமாகில் அவன் தவறுதலை ஒருவேளை நீ அவனுக்கு நிரூபிக்கலாம் ; என்றாலும் அநேக சமயங்களில் இது கூட அக்ரமமாய்த் தலையிடுவதாக முடியும். எக்காரணத்தாலும் மூன்றாம் மனிதனிடம் நீ போய் அதைப் பற்றிப் பிதற்றவேண்டாம். ஏனெனில் அஃதொரு கொடிய பாபச்செய்கை.

30. குழந்தைகளுக்காவது மிருகங்களுக்காவது எவரேனும் தீங்கு செய்வதைக் கண்டால், அதைத் தடுக்கப் பிரவேசிப்பது உன் கடமை. உன் தேசத்து இராசாங்கச் சட்டத்துக்கு விரோதமாய் எவனாவது நடப்பதைக் கண்டால், அதிகாரிகளிடம் நீ அதைத் தெரிவிக்கவேண்டும். நீ கற்பிக்கவென்றே ஒருவன் உன் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்தாலும், அவன் குற்றங்களைப்பற்றி அவனுக்குச் சாந்தமாய் எடுத்துரைப்பதே உன் கடமையாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தவிர எப்போதும் உன் சொந்தக் காரியத்தைக் கவனி. மௌனம் என்னும் நற்குணத்தை அப்பியசித்துவா.

பிரஹ்மஞான சங்கங்களின் வேலை.

(3)

ஞானம் வேண்டுமானல் சிரத்தை வேண்டும். அந்த சிரத்தை ஒருமுகமாகவும், புலன்கள் தூண்டும் வழி இழு படாமலும் திடமாயிருக்க வேண்டுமென்று முன் சஞ்சிகையில் சொல்லப்பட்டது. அப்படி சிரத்தையுடன் தேடி, ஞான த்தை அடைந்தால் சீக்கிரத்தில் பரமமான சாந்தி யடைய லாம். சிரத்தையில்லாமல் ஞான மடையாதவன் எதிலும் சந் தேகத்தை யடைந்து கெடுகிறான். (ப. கீதை. IV., 40) ஏன்? எப்பொழுதும் சந்தேகப்படுகிறவனுக்கு யாரிடத்தி லும் சந்தேகம். எக்காரியத்திலும் சந்தேகம் உண்டாகும். ஒருவரையும் ஒன்றையும் நம்பமாட்டான். அதனல் இவ்வுல கத்தில் மனது சமாதான மடைவதில்லை. மறு உலக விஷய மாகவும் நிச்சய புத்தி யில்லாததால் அதைத் தேட சிரத்தை கிடையாது. ஆகையால் இகபர மிரண்டையும் இழந்து கஷ் டப்படுகிறான். இதற்கெல்லாம் காரணம் நாம் செய்யும் காரி யங்களோ, எடுத்துக் கொள்ளும் பிரயத்தினங்களோ, எல்லா வற்றிலும் தகுந்த யோசனை செய்து, யார் எது சொன்னலும், என்ன நேரிட்டாலும், மனம் தளராது தைரியமாயிருக்கும் படி முதலிலேயே தீர்மானித்துக் கொள்ளாதது தான்.

அநேகர், அன்னை வஸந்தம்மையாரின் அற்புத உபந்நியாஸங் களை அல்லது இதர ஞான சகோதரர்களின் உபந்நியாஸங் களைக் கேட்டோ, அவர்கள் புத்தகங்களைப் படித்தோ, அல் லது நமது **கான்பரன்சு, பிடரேஷன், கன்வென்ஷன்** முத லான கூட்டங்களைக் கண்டு அந்தக் காலங்களில் அங்கு பரவும் சக்திகளின் வசப்பட்டோ, உத்ஸாகம் மேற் கொண்டு ஆழ்ந்து யோசனை செய்யாமல் இந்த சங்கத்தில் சேர்ந்து விடு கிறார்கள். சிலர், லௌகிக சௌகரியங்களை உத்தேசித்தும் அல்லது மேலிருப்பவரின் திருப்திக்காகவும் சேருகின்றனர். மற்றும் சிலர், எல்லோரும் தாரதம்யமில்லாமல் சமமாகப் பழக லாம், சமமான அந்தஸ்து மரியாதை, சௌகரியங்கள் கிடைக் கின்றன வென்றும் சேருகிறார்கள். அப்படிப்பட்டவர்களு க்கு கிரந்தங்களை மேன்மேலும் படித்து உணர்ந்து விருத்தி பெற வேண்டுமென்ற சிரத்தை யிருக்கிறதில்லை. இதற்கு ஜன்மாந்தர பிரயத்தினம் கொஞ்சம். இப்பொழுது தேகம், புலன்கள், மனது இவைகளின் சோம்பலும் அதிகம். அத

னல் நீடித்து சிரத்தை யிருக்கிறதில்லை. மற்ற யோசனைக ளால் சேருகிறவர்களுக்கு அவர்கள் நினைத்த சௌகரியங்கள் கிட்டா விட்டால், சங்கத்தைப் பழிப்பதும் தூஷிப்பதும் கூட ஏற்படுகின்றன. ஆகையால் தான் மெம்பராகச் சேரவேண்டு மென்று ஒருவர் தெரிவித்துக் கொண்டால், ஓர் கிளைச் சங் கத்தின் காரியதரிசியோ, அல்லது அவரைச் சேர்க்கும் அக்கி ராஸனாதிபதியோ, சங்கத்தின் முக்கிய கொள்கைகளை அவரு க்கு நன்றாய்த் தெரிவிக்க வேண்டும்.

இச்சங்கத்தின் முக்கிய கொள்கை ஸர்வ பூத சகோதர பாவம். சகோதரபாவம் என்றால் ஒரு குடும்பத்தில் ஒரு கர்ப்பத்திலுதித்த சகோதரர்கள் எப்படி ஒருவர்க்கொருவர் அன்பு காட்டி நடப்பார்களோ, அப்படி அங்கத்தினர்களும் ஒருவர்க்கொருவர் அன்பு காட்டி வரல் வேண்டும். வயதின் வித்தியாசத்தாலும், படிப்பு, அனுபவம், யோக்யதை இவைக ளின் வித்தியாசத்தாலும் ஒரு குடும்பத்தில் எப்படி வேறு வேறான ஸ்தானம், தொழில், மரியாதைகளுக்கிடம் உள் ளதோ, அப்படியே இந்த சங்கத்திலும். ஆனால் குடும்பத் தில் வித்தியாசங்களிருப்பினும் சுகதுக்கங்களையும், லாப நஷ் டங்களையும் எப்படி அன்புடன் ஒன்றாகப் பார்ப்பார்களோ அப்படியே நாமும் பார்க்க முயல வேண்டும். இந்த விஷ யத்தை விவரமாகத் தெரிவிக்காததாலும் கிளைச் சங்கத்திற்கு அங்கத்தினர்கள் விருத்தியாக வேண்டுமென்ற ஒரு எண்ணத் தால் மட்டும் அவர்களைச் சேர்த்தோமானால் அதனால் விளை யும் தீங்குகள் அநேகம்.

சிலர் சூக்ஷ்ம திருஷ்டி, சூக்ஷ்ம சக்திகள் அடையலா மென்று சேருகிறார்கள். அந்த வேடிக்கை விநோதங்கள் கிடைக்காததால் உத்ஸாகம் போய் விடுகிறது. இவ்விதம் சேர்ந்து தளர்ந்த மெம்பர்களையும் அவர்களாலான கிளைச் சங் கங்கள் அநேகம் க்ஷீணித்திருப்பதையும் நாம் பார்த்திருக்கி றோம்.

இஃது இப்படியிருக்க, ஜன்மாந்தர சம்பந்தத்தால் பக்குவ மாய்த் தயாராயிருப்பவர்களுக்கு, சந்தர்ப்பம் நேரிட்ட காலத் தில் வீணான தடைகள் ஏற்படுத்தாமல் சேருவதற்கு அனு கூலம் செய்ய வேண்டியது அவசியம். ஆகையால் உத்தர வாதம் வகித்த கிளைச் சபை அதிகாரிகள் அதிக ஜாக்கிரதை யாயிருக்க வேண்டும். பொதுவாய், கிரந்தங்களைக் கொடுத்து படிக்கச்செய்தும், பிறகு நேரில் பேசியும் நிஜமான சிரத்தை

யிருக்கிறதாவென்று தெரிந்தும் அங்கத்தினர்களைச் சேர்ப்பது உசிதம்.

சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள் இருப்பது, நடப்பது, பேசுவது, இவற்றைக் கொண்டே பக்குவமுள்ளவர்கள் தாமாகச் சேருவார்கள். அவர்கள் சங்கத்திற்கு நிஜமான ஆதரவுள்ளவர்களாவார்கள். உதாரணமாக நான் இருந்த கிளைச் சபையில் ஒரு அங்கத்தினர் சேர்ந்த வழியைச் சொல்லுகிறேன். அவர் பெயர் விநாயகர் என்று வைத்துக் கொள்வோம். விநாயகர் ஓர் போலீஸ் உத்தியோகஸ்தர், உத்தியோக முறையில் எனது நண்பர். நானும் அவரும் அடிக்கடி காண்பதும் பேசுவது முண்டு. சிறிது காலமானவுடன, விநாயகர் என்னைத் தேடி லாட்ஜுக்கு வந்து கொண்டிருந்தார். புத்தக சாலையினின்றும் புத்தகம் எடுத்துப் போய் படிப்பார். அவர் தமிழ் கிரந்தங்கள் நன்ருய்ப் படித்தறிந்தவர். பிறகு இவர் அடிக்கடி கிளைச் சபைக் கூட்டம் தொடங்கு முன் ஹாலில் கொஞ்ச நேரம் இருந்து போவாரென்று கேள்விப்பட்டேன். ஒரு நாள் விநாயகரைச் சந்தித்து, "ஐயா! நாங்கள் இல்லாத காலத்தில் தாங்கள் லாட்ஜில் கொஞ்ச நேரம் அடிக்கடி இருந்து போகிறீர்களாமே! என்ன விசேஷம்?" என்று கேட்க, அதற்கு அவர், "ஐயா! இந்த ஹாலில் கொஞ்ச நேரமிருந்தால் மனதிற்கு ஓர் சாந்தி யேற்படுகிறது. அதற்காகத் தனியே சிறிது நேரம் இங்கு தங்கி பிறகு சந்தோஷமாய்ப் போகிறேன்," என்ருர். சில காலத்திற்குப் பின், வியாதியாயிருந்த அவர் மனையாள் அதிக நோய் கொண்டு சிவலோகமடைந்தாள். நான் இதைக் கேள்விப்பட்டதும் உடனே நேரில் போக அசௌகரியமாயிருந்ததால் என் நண்பர் விநாயகருக்கு ஓர் துக்க சமாதான கடிதமும், ஸ்ரீமான் லெட்பீட்டர் அவர்களின் "மரண பயம் வேண்டாம்" (துக்காக்கிராந்தர்களுக்கு 'To Those Who Mourn") என்ற சிறு புத்தகத்தையும், "சித்ரகேது" என்ற ஒரு சிறு புத்தகத்தையும் அனுப்பினேன். அவர் மயானத்திலிருந்து உத்தரகிரியை முடித்து திரும்பி வீடு நுழைந்து தன் பத்தினியிருந்து பாழாயிருக்கும் ஸ்தானத்தைப் பார்த்து ஏங்கி நின்ற சமயத்தில், என் கடிதமும் புத்தகங்களும் அவர் கையிற் சேர்ந்தன. மறு நாட் காலையில் நான் அவரைப் பார்த்த காலத்தில் அவருக்கிருந்த திருப்தியையும் ஸமாதானத்தையும் என்னென்று சொல்வது? என்னைக் கண்டவுடன் அவர் மிக்க நன்றியறிதலுடன், கடிதமும் புத்தகமும் அவருக்குச் செய்த உதவியை

மிகவும் கொண்டாடினார். அதற்குப் பிறகு ஒரு சமயம் நமது தலைவர் அன்னை வஸந்தம்மையார் அங்கு விஜயம் செய்த பொழுது, அவர் தாமாகவே மனுச் செய்து கொண்டு அவ்வம்மையார் கைப்படச் சங்கத்தில் சேர்ந்தார். அது முதல் சிரத்தையுடன் கூடிய உபகாரியாயிருந்தனர். அவர் விஷயமாக எப்பொழுதாவது தளர்ச்சி யேற்படுமென்று நினைப்போமா? அப்படிப்பட்டவர்கள் ஒரு வேளை உற்சாகமற்றிருந்தாலும் ஸங்கபலமும சௌகரியங்களும் இல்லாதது காரணமாயிருக்கும். அவர்களை சீக்கிரமாய் மீட்கலாம். அது நமது பிரஹ்மஞான பிரசாரகர்களின் வேலை.

தாக்ஷிண்யத்திற்காகவும், சொந்த சௌகரியங்களுக்காகவும் சேர்ந்து, யாருடைய தாக்ஷிண்யம் வேண்டி யிருந்ததோ அவர் ஊரை விட்டு அகன்றவுடன் தன் சொந்த பலத்தில் நிற்கச் சக்தியற்று சங்கத்தை விட்டு நீங்கினவர்களையும் பார்த்திருக்கின்றோம்.

என் சொந்த விஷயத்தைச் சொல்லில், 1902ஸூ த்தில் சிற்றம்பலத்தில் நான் சங்கத்தைச் சேர்ந்தேன். நமது அன்பிற்கும் கௌரவத்திற்கும் பாத்தியப்பட்டு அநேக வருட காலம் சங்கத்திற்கு சுயநலம் மறந்து உழைத்து வரும் பிரஹ்மஸ்ரீ ராமச்சந்திர ராயர் அவர்கள் உத்தியோகத்திலிருந்து பென்ஷன் வாங்கிக்கொண்டதும் பிரஹ்மஞானப் பிரசாரார்த்தமாக அநேக விடங்கள் சுற்றிக்கொண்டு சிற்றம்பலம் வந்த காலத்தில் அவரை நேரில் பார்த்து அவரது உபந்நியாஸங்களைக் கேட்டு, எனது நண்பர் ஸ்கூல் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டராயிருந்த ஸ்வாமிநாதய்யர் அவர்கள் தூண்டுதல் பேரிலும், உதவியைக் கொண்டும் நானும் இன்னும் சிலரும் சங்கத்திற் சேர்ந்தோம். அந்தக் காலத்தில் சங்கத்தின் நோக்கங்களை ஆழ்ந்து அறியாதிருந்தாலும், மதாபிவிருத்திக்கும் நல்வழியில் நடப்பதற்கும் வேண்டிய விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள இந்த சங்கம் நல்ல சாதனமென்ற ஸ்தூலமான எண்ணத்துடன் சேர்ந்தோம். ஆனால் அந்த நாள் முதல் இன்று வரை மேன்மேல் உயர்நலமான நோக்கங்களைத் தெளிவுறக் கற்று, அனுபவத்தில் கொண்டுவர பிரயத்தினப்பட்டு, உலகத்தில் ஞானத்தைப் புகட்டுவதற்காக பக்குவமான ஆன்மாக்களைத்தேடி ஸதா சஞ்சரித்து வரும் ஸித்தேசர்களான மஹரிஷிகள் இப்பொழுதும் இருக்கிறார்கள், அவர்களை யடையும் மார்க்கமுண்டு, அதற்கு கைகாட்டிகளாக

அமைந்திருக்கும் பெரியோர்கள் நம்முடன் கலந்தே இருக்கிறார்களென்று கேட்டு, மனப்பூர்த்தியாக நம்பி, அவர்களை வழிபட்டு நடக்கவும் சாத்தியமாயிற்று. மஹரிஷிகளை அடையும் மார்க்கத்தை யநுசரிக்க சிற்றம்பலத்தில் முதன் முதல் தொடங்கினேன். சித்ஸபேசன் அனுக்கிரகத்தாலும், மஹரிஷிகளின் கருணையாலும், ஜன்மாந்தர பாக்கியத்தாலும், ஒரு நாளாவது சங்கத்தின் நோக்கங்கள், அதன் தலைவர், அதன் அத்யக்ஷர்கள் எவரிடத்திலும் சந்தேகம் ஜனிக்காமல் சங்கத்தின் காரியங்களில் சந்தோஷமும், உத்ஸாகமும் மேலிட்டுக் கொண்டே வருகின்றன. தீர்க்கமான யோசனைகள் செய்யாமல் முதலில் சேர்ந்தாலும், மேற்கண்ட அனுகூலங்களால் சபைக்கு ஸாத்தியமான வரை சில கைங்கரியங்களும் செய்ய பலம் கிடைத்தது.

சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உத்ஸாகம் குறையாமல் நடக்க வேண்டுமானால், அதன் முக்கியமான கொள்கைகளை நன்றாய் மனதில் வாங்கி சமாதானம் பெற வேண்டும். சாமான்யமாக மெம்பர்களாக வேண்டுமானால் ஸர்வபூத சகோதரபாவம் ஒன்றை ஒப்புக் கொண்டால் போதும். ஒப்புக் கொண்ட பிறகு அந்த மேன்மையான பாவத்தை நடவடிக்கையில் கொண்டு வரப் பிரயத்தினப்பட வேண்டும். பிரயத்தினங்கள் மூவகை யாகும்.

(1) **பரோபகாரமான கைங்கரியங்கள்.** பிறருக்கு உபகாரம் செய்யும் வழி துறைகள் எங்கும் நிற்கின்றன. திரவியமிருந்தால் மட்டும் உபகாரம் சாத்தியமென்று நினைப்பது தவறு. பொதுவாய் பணமுள்ளார்க்கு பரோபகாரசிந்தனை கிட்டாது. செல்வமுள்ளவர்களுடைய ஞாபகமெல்லாம் அதைக் காப்பாற்றுவதிலும் விருத்தி செய்வதிலும் செல்லுகின்றது. அவர்களுக்கு மற்றவரைக் குறித்து நினைப்பதற்கு அவகாசம் ஏது? பணமிருந்து, உபகாரிகளாகவும் இருப்பது அரிது. அப்படியிருந்தாலும் அவர்களுடைய ஐசுவரியத்தை நல் வழியில் பிறருக்கு அதிக உபகாரமாகும்படி செலவழிப்பதற்கு உபாயம் சொல்லி பணம் சம்பாதித்து நாணயமாய்ச் செலவிடும் மனிதர்கள் வேண்டும். அவ்விதம் கைங்கரியங்களை நடத்துகிறவர்கள் நம் சங்கத்தில் அநேகர் இருக்கின்றனர். சர்க்கார் காரிய நிர்வாஹகர்களுக்குங் கூட நம் சங்கத்தைச் சேர்ந்தவர்களிடம் பொதுவாய் நம்பிக்கையுண்டு. ஒரு ஸமயம் தர்ம ரக்ஷண சபை காரியங்கள் நன்றாய் நடந்தேறும்

பொருட்டு தகுந்த மனிதர்கள் வேண்டுமே என்று யோசனை வந்த காலத்தில், அக்காலம் சர்க்கார் நிர்வாக சபையில் செல்வாக்குள்ள மெம்பராயிருந்த காலம் சென்ற கனம் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் சொன்னாராம்: பிரஹ்மஞான சபையைச் சேர்ந்த நல்ல மெம்பர்கள் கிடைத்து அவர்கள் ஏற்றுக்கொண்டால் சரியாக நடக்குமென்று தெரிவித்தாராம். அப்படி உபயோகமுள்ளவர்கள் உண்டு. அவர்களுடைய தளராத உத்ஸாகத்திற்குக் காரணம் சங்கத்தின் உயர்வான நோக்கங்களும், அதில் ஸித்தியடைந்த பெரியோர்கள் நடந்து காட்டி யிருக்கும் மார்க்கத்தில் திடமான நம்பிக்கையுமே தான். இந்திரியங்களாலும் மனதாலும் நம்மாலியன்ற அளவு பிரதி தினமும் பிறருக்கு ஏதேனும் தொண்டு செய்து வருவோமானால் பெரியோரது பார்வை கிட்டும்.

சித்ஸபாவாஸி.

தூல சூக்கும பிரபஞ்சங்கள்

அநேகப் பிரமாணங்களில், பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம் என்கிற மூன்றைப் பொதுவாகவும் முக்கியமாகவும் பெரியார் அங்கீகரித்துள்ளார். ஆனால் இப்பிரமாணங்களால் பரவஸ்துவை நிர்ணயஞ்செய்வது அசாத்தியமென்பதை நாம் அறிந்துள்ளோம். ஏனெனில், இம்மூன்றுக்கும் வஸ்து மேற்பட்டது காரணம்பற்றியே. பஞ்ச ஞானேந்திரியங்களாலாவது (மெய், வாய், கண், மூக்கு, செவி), காரணகாரியத் தொடராலாவது, அதற்குச் சமானமாயுள்ள யாதொரு வஸ்து மூலமாயாவது, வஸ்து இத்தன்மையதென்று சித்தாந்தப்படுத்துவோமென்பது குற்றமாக முடியும். அவ்வஸ்துவிற்கு எவ்வித குணத்தைக் கற்பிப்பது? அதுவென்று எதைச்சுட்டிக்காட்டுவது? ஆனால் நம்முடைய அந்தரங்க பக்தியை செலுத்துவதற்கும், பிரேமையைக் காட்டுவதற்கும், ஒரு பொருளைத் தேடிச்செல்லுகிறோம். அக்காரணம் பற்றி அவ்வஸ்துவை அனந்த கல்யாணகுண ஸம்பன்னனென்று வர்ணிக்கிறோம். இதற்குமேல் செல்லும் மார்க்கம் விளங்கவில்லை

இவ்விஷய மிப்படியிருக்க, அவ்வஸ்துவை யாதாரமாகக் கொண்டு பஞ்ச மஹாபூதங்களால் அமைக்கப்பட்ட விசித்திர பிரபஞ்சத்தை முற்றும் அறிந்துவிடலாமென்றால் அதுவும்

அசாத்தியமே. கண்ணுக்குத்தெரியாத கிருமிகள் தண்ணீரிலும், ஸ்பரிசத்தால் உணரக்கூடாத அணுப்பிராயமான ஜந்துக்கள் காற்றிலும், செவிகளால் கேட்கமுடியாத கீழ்ஸ்தாயி மேல் ஸ்தாயிகளில் தொனிக்கும் ஸ்வரங்களும், இதேமாதிரியாக மற்ற இந்திரியங்களுக்கு வசப்படாத விஷயங்களும் பல உண்டு. இவைகளையெல்லாம் நாமறிந்து பரிசீலனை செய்வதற்கு அனேக யந்திரங்களை மேல்நாட்டு சாஸ்திரிகள் கண்டு பிடித்துள்ளார். பூதக்கண்ணாடியால் கண்களுக்குத் தென்படாத வஸ்துக்களைப் பார்க்கவும், தூரதிருஷ்டிக் கண்ணாடியால் அநேக யோஜனை (எட்டுமைல்) தூரமுள்ள நக்ஷத்திரங்களின் குணாதிசயங்களை யறியவும், வேறு யந்திரங்களால், நுட்பமாயும் புலன்களுக்கெட்டாததாயு முள்ளவைகளை பரிசீலனை செய்யவும், ஏற்பாடுசெய்துள்ளார். இவ்விதமாகவே, ஸ்தூல சம்பந்தமான நம்முடைய சரீரக் கூறுபாடுகளையும், அதிலுள்ள விசித்திரக்காட்சிகளையும் நாம் வியக்கும்படி எடுத்துக்காட்டியும், செப்பியுமுள்ளார். ஆகிலும், இதற்கு அதீதமான, சூக்ஷ்ம காரண தேகங்களை மேற்சொல்லிய யந்திரங்களைக்கொண்டு அறிவது இயலாதாகையால், அவ்வித சரீரங்கள் உண்மையிலுள்ளனவோ, என்ற சங்கை நிகழ்வது ஸகஜமே. ஆனால் ஸ்தூலத்திற்கு மேற்பட்ட சரீரங்கள் ஏற்பட்டுள்ளனவென்று சாஸ்திரங்கள் முறையிடுவதால், அவைகளை எப்படி யூகித்து அறியக்கூடுமென்ற வினாவிற்கு அறிவிற் சிறந்த பெரியோர்விடையளித்துள்ளார். ஆகையால் அவைகளைத் தெரிந்து கொள்வது அசாத்தியமென்று தோன்றவில்லை. ஸ்தூல பிரபஞ்சத்திலுள்ள வஸ்துக்களை இந்திரியங்களாலும், ஸ்தூலக் கருவிகளாலும் அறிவது சாத்தியமானால், சூக்ஷ்ம பிரபஞ்சத்தையும் அதிலடங்கிய காட்சிகளையுங் காண்பதற்கு, சூக்ஷ்ம யந்திரங்கள் வேண்டும் என்பதை மறுத்தல் முடியாது. அவைகளெவை, எத்தன்மையன என்கிறதை ஆலோசிக்கவேண்டும். ஸ்வப்நாவஸ்தையிலும், ஒருவனுடைய ஸ்தூலப் பிரக்ஞையைப் பங்கப்படுமாறு செய்து அவனுக்குஞ் ஸ்தூலப் பிரபஞ்சத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமல் செய்துள்ள நிலைமையிலும், அநேக விசித்திரங்களை ஜீவன் கண்டுகளித்தும் சிற்சில வேளைகளில் அவைகளை வாக்கால் வெளியிட்டிருப்பதை அனேக கிரந்தங்களில் காணலாம். இதனால் இரண்டு விஷயங்கள் ஏற்படுகின்றன. (1) ஸ்தூலத்திற்கு அதீதமான பிரபஞ்சமிருப்பது ஒன்று. (2) அதில் விளங்கும் ஜீவன் ஒருவித சூக்ஷ்மக்கருவியால் அந்த உலகத்தின் வியாபாரங்களை

யனுபவிப்பது இரண்டு. சூக்குமக் கருவியென்று லென்ன வென்று கேட்குமிடத்து; ஜீவன் எவ்வித சரீரத்தில் வசிக்கிறானோ அவ்விதத் தன்மையாகத்தான் அக்கருவி யிருக்கவேண்டுமென்பது திண்ணம். அநுமானம் ஒரு பிரமாணமல்லவா? பஞ்சேந்திரியங்களை சரீரத்தின் அங்கங்களாய் அமையப்பெற்று அவைகளின் வழியாய் எவ்விதமாக ஸ்தூல உலகத்தை நாம் அறிகிறோமோ, அவ்விதமாகவே சூக்கும இந்திரியங்களின் வழியாய் அவ்வுலகத்தின் வியாபாரங்களைத் தெரிந்துகொள்கிறோமென்று சொல்வது யுக்திக்கு முரணாகாது. சூக்கும இந்திரியங்கள் சூக்கும தேகத்தைபபற்றியுள்ளனவென்பது சொல்லாமலே விளங்கும். ஆனாலவ்விஷயங்கள் அநுபவசித்தமா என்றால், சில உதாரணங்களால் யூகிக்கலாம்.

ஸ்தூலசரீரங் களைத்து, ஒருவித வேலைக்கும் உபயோகமில்லாதபோது வெட்டியமரம்போல் சாய்ந்து, அயர்ந்து நித்திரை செய்கிறது. அச்சமயம் இவ்வுலக சம்பந்த மற்றுவிடுகிறது. அந்த அவஸ்தையில் ஜீவன் எவ்விடம் ஒடுங்கினான்? அவனும் துயின்றானோவெனில், அது அநுபவத்திற்கு ஒவ்வாது. ஸ்வப்ன சுஷுப்தி அவஸ்தைகளுமில்லையென்று ஏற்படும்; உண்மையில் அவன் ஸ்தூலத்தில் ஒடுங்கவுமில்லை, துயில்கொள்ளவுமில்லை. ஸ்வப்ன அவஸ்தையில் ஜீவன் சூக்கும சரீரத்தில் வியாபாரஞ்செய்கிறான். அவனுக்கு பகலுமில்லை இரவுமில்லை; ஓய்வுமில்லை ஒழிவுமில்லை, பசியுமில்லை களைப்பு மில்லை; வீடுமில்லை, காடுமில்லை; சீதத்தாலுண்டாகும் வருத்தமுமில்லை, உஷ்ணத்தாலேற்படுங் காய்ச்சலுமில்லை. ஒரு சரீரத்தை விட்டால் மற்றுமுள்ள சரீரங்களில் வசிக்கிறான். ஆகையால், ஸ்தூல சரீர மயர்ந்துவிட்டால் சூக்கும சரீரத்தில் விளங்குகிறான். ஸ்தூலப் பிரபஞ்சத்தின் அறிவானது, எவ்வளவுக்கு ஸ்தூலக்கருவிகள் நுட்பமாகவும் கூர்மையாகவுமிருக்கின்றனவோ அவ்வளவக்கு மேம்பாடுடையது என்று அறிவோம். அவ்விதமே சூக்கும தேகத்தின் கருவிகளுமிருக்கவேண்டும். இன்றேல் அந்தகாரத்தில் திசை தப்பி மயங்கி, குற்றியை மகனென்று பாவித்து நிற்பவருடைய நிலையையொக்கும். அது காரணம்பற்றி, சூக்கும உலகமென்றால் எது? சூக்கும சரீரமென்று லெத்தன்மையது? அதில் ஜீவன் வியாபிக்குங்கால் அவனுக்கும் மேற்சொல்லிய உலகங்களுக்குமுள்ள சம்பந்தமென்ன—எனும் இத்தகைய வினாக்களேற்படும். அவைகளை விசாரணைசெய்து தெளிவது இன்றி

யமையாதது. இவ்வபூர்வமான விஷயங்களை எளிய நடையிலும், சவிஸ்தாரமாகவும், பிரம வித்தியா சங்கத்தின் தலைவர்கள் எழுதியுள்ளார். அவ்வளவு தெளிவான கிரந்தங்கள் முன் ஏற்படவில்லை. அவைகளை என் விசாரிக்கவேண்டுமெனில், தூக்கத்தில் ஜீவன் சொற்ப காலம் வேறு தேகத்தில் சஞ்சரித்து மறுபடியும் (அதாவது, விழிக்குங்கால்) ஸ்தூலத்தைப் போர்த்துக்கொள்வதினாலும், ஸ்தூல மழியுங்கால் அவனுக்கு சூக்குமத்திலேயே அநுபவமேற்படுவதினாலும், இவ்வாறு இவ்விரண்டு ஸ்திதியிலும் சூக்கும உலகமும் சூக்கும தேகமும் ஜீவனால் கையாளப்படவேண்டியிருப்பதுதான் காரணம். எதுபோலவெனில், நாம் லண்டன் பட்டணத்திற்குப்போக உத்தேசித்தால், போகும் மார்க்கம், சென்ற பின்னர் அத்தேசத்தில் பார்க்கத்தக்க காட்சிகள், அவைகளைப் பார்த்து அநுபவிக்கும் சாதனங்கள்,—இவைகளை எல்லாம் விசாரித்தறியாமல் சென்னையில் ரயிலேறிவிட்டால் எவ்வித கஷ்டதுக்கங்களை யனுபவிக்கநேருமோ, அவ்வாறே நாமும் சூக்கும விஷயங்களை ஆராயாமலிருந்து காலத்தைக் கழித்துவிட்டால் துக்கத்திற்கு உள்ளாவோம். இதை உணராதவர்கள் யாருமில்லை. ஆனால் எப்போதும் நினைவில் மாத்திரம் ஒருவரும் வைப்பதில்லை.

ஒருவன் தன் ஸ்தூலதேகத்தைக் காப்பாற்றும் பொருட்டு செய்யவேண்டியதென்ன? சாத்விக ஆஹாரத்தை மிதமாக உட்கொள்ளவேண்டும். கும்பகர்ணன் கைவசப்பட்டு அவனை யெக்காலமும் ஸேவிக்கலாகாது. சரீரத்திற்கு நித்திரையாலுண்டாகும் அநுகூலத்தையும் மறுக்கலாகாது. கீதா சாஸ்திரத்தில் பகவான் அருளியவாறு யாவற்றிலும் மிதம் வேண்டும். இவ்வழியே நிற்கவேண்டுமென்று பகவான் கௌதம புத்தர் பிக்ஷுகளுக்கும் பிக்ஷுணிகளுக்கும் உபதேசித்துள்ளார். "ஸத்குரு பாதங்களில்" என்ற அருமையான கிரந்தத்திலும், ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதே கருத்தை வெளியிட்டுள்ளார். நமக்கு உபயோகத்திற்காக வைத்துக்கொண்டிருக்கும் குதிரையை தினந்தோறும் மாலீஸ் செய்து, மிதமான தீனிபோட்டு நன்றாய் பாதுகாத்து, நாம் நினைக்கும் வழியில் நடத்தி அதின் பிரயோஜனத்தை அடைகிறோமல்லவா? அதேவிதமாக சரீரத்தை பயன்பெற உபயோகித்தல் வேண்டும். அதெவ்வாறென்பதைக் கூறுகிறேன். ஆசாபாசங்களுக்கு உண்மையான இருப்பிடம் சூக்கும உலகம். நமது ஒவ்வொரு ஆசாபாசத்தாலும், கோபதாபத்தாலும் நம்

சூக்கும சரீரம் அவ்வுலகில் எரிமலையின் அக்கினி வெள்ளத்தைப்போல் இரத்தச் சிவப்பாய் உக்கிரமாய் காணப்படும். ஆயினும் அதன் ஒரு சிறு அம்சமே நம்மூளையில் தாக்கி தூல சரீரத்தை ஆக்கிரமிக்கிறதாகையால், அதன் உக்கிரமான சொரூபத்தை இவ்வுலகில் உள்ளபடி உணருகிறோமில்லை. அதாவதென்னவெனில், தூல சரீர பூர்வமாக நாம் இந்திரிய நுகர்ச்சியின் வழிச்சென்று வருவித்துக்கொள்ளும் ஆசாபாசங்களும் கோபதாபங்களும், பிறபட்டு தூலம் பிரிந்தவுடன் நம்மைக் கட்டுப்படுத்தும் விலங்குகளாகவும் நம்மைத் எரிக்கும் தீப்பந்தங்களாகவும் ஏற்படுகின்றன. இவ்வாறே நற்குணங்களுக்கும், தூலப்பிரஜ்ஞை பூர்வமாக நாம் விருத்திசெய்துகொள்ளும், தயை, பச்சாத்தாபம், கருணை, ஜீவகாருண்யம், சோதரபாவம், முதலிய குணவிசேஷங்களால் சூக்கும சரீரம் பதின்மடங்கு அதி மனோஹரமான அழகிய விசித்திர வர்ணங்களால் விகஸித்து ஒளிவீசும். இவ்வாறு ஸ்தூல சரீரத்தை முறையறிந்து நடத்துவதில், நம் சூக்கும சரீரத்தையும் அழகியதாய் அமைத்துக்கொள்ளுதல் முடியும்.

அதனால் சூக்கும தேகத்தில் ஜீவன் தன் யாதார்த்த சொரூபத்தோடு விளங்குவான். களங்கமுள்ள கண்ணாடியினிடத்து நமது ரூபத்தை சுத்தமாக காணமுடியாது. களங்கம் பெற்று மலினமடைந்த சூக்கும தேகத்தில் ஜீவனுடைய சொரூபம் மறைந்தே கிடக்கும். ஜீவன் தன் ஸ்தூலத்தோடு கூடி விளங்கும் போதும் அதைப் பிரிந்த காலத்தும் இவ்விரண்டு ஸ்திதிகளிலும் ஜீவன் விளக்கமுறப் பிரகாசிக்க வேண்டில், பெரியாரிட்ட கட்டளைப்படி நடத்தல் வேண்டும். மேற்குறித்த சாதனங்களைக் கொண்டு நமது உத்தேசத்தை நிறைவேற்றிக் கொள்வது ஸாத்தியமாவெனில், இவைகளுக்கெல்லாம் ஆஸ்தானமாயுள்ள மனதையும் வசப்படுத்திக் கொண்டால், சாதிப்பது அருமையன்று. அம்மனத்திற்கு சூக்கும தேகத்தை தன் வசப்படுத்திக்கொண்டு ஆளுந்திறமையும், அல்லது ஸ்தூலத்தின் பின் பற்றிச் சென்று அதிலுண்டாகும் விகாரங்களை யெல்லாம் தன்னிடத்தில் பிரதிபலிக்கச் செய்து சூக்குமத்தைப் பம்பரம்போல் ஆட்டுவிக்கும் துர்க்குணமும் உண்டு. சூக்குமத்தை தன் வசப்படுத்தும் தன்மையால் அதற்கு சுத்தமனதென்றும், சூக்கும தேகத்தோடு சேர்ந்து அது வழி நிற்குங்கால் அதற்கு காமமனதென்றும், அசுத்தமனதென்றும், பெயரிட்டிருக்கிறார்கள். இவ்வித சம்பந்தங்களை ஆலோசித்து அறிய வேண்டியது

இன்றி அமையாதது. எவ்வழிபற்றினால் சுகம், எவ்வழி சென்றால் துக்கம், என்கிறதை பரிசீலனை செய்வது நமது கடமை. ஸ்தூல சூக்ஷும சரீரங்கள் ஒன்றிலொன்று வியாபித்திருக்கும் காலத்திலேயே அமோகமாய்த் துன்ப இன்பங்களுக்கு இடம் உண்டாகுமாகில், ஸ்தூலதேகம் பிரிந்தபிறகு சூக்ஷும தேகத்தின் மூலமாய் நாம் அனுபவிக்கும் சுகதுக்கங்களை எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? ஸ்தூலவுலகத்தில் காலூன்றி நிற்குமளவு நமக்குள்ள ஸ்தூல ஞானேந்திரியக் கருவிகளினால் சூக்ஷுமத்தின் விசித்திரத்தைக் காண்பது அசாத்தியமென்று முதலிலறிவித்தேன். காரணம், சூக்ஷும உலகத்தின் தன்மை அதிநுட்பமாகவும், நம்மால் நிர்ணயஞ் செய்துள்ள கால, தேச, வர்த்தமானங்களுக்கு அதீதமாகவு மிருப்பதினாற்றான். ஆகையினால், சூக்ஷுமத்திலநுபவிக்கும் இன்பதுன்பங்கள், ஸ்தூலானுபவத்தைப் பார்க்க பன்மடங்கு மிகுதி பெற்றன. இதற்காகவே நாம் ஸ்தூலதேகியாயிருக்கும் காலத்தில், திரிகரணங்களை சுத்தப்படுத்தல் வேண்டுமென்றுபதேசிக்கப்பட்டிருக்கிறோம். இதை யறிவது சுலபமானாலும் அறிந்தவாறு நடப்பது கஷ்டசாத்தியம்போல் தோனறும். அசாத்தியமென்று நினைக்கும் விஷயங்களையெல்லாம் சாதிக்கும் திறம் மனிதனிடமிருக்கிறதை அறிந்துள்ளோம். ஒன்றையும் அசாத்தியமென்று மறுப்பது இயலாது. நம்மில் அடங்கிக்கிடக்கும் சக்தியை மறந்தால் விபரீதமுண்டாகும்.

N. P. சுப்பிரமணியன்.

நல்லாசிரியரது பிரதிக்ஞைகள்.

---

1. என் மாணவர்களின் ஆன்மா தான் உபயோகித்துவரும் கோசங்களை மென்மேலும் அடக்கியாளுமாறு உதவிபுரிதலே உபாத்தியாயரான எனது தர்மமென்று நான் நம்புகிறேன்.

ஆன்மா இயங்கும் கோசங்களின் ஆசை எப்போதும் ஆன்மாவின் உண்மையான அவா அல்லது தேவையாகா தென்று நானுணர்ந்து என்மாணவர்களின் ஆன்மா பூரணவிகாஸம் பெறுமாறு தேவையான சுதந்தரத்தை அவர்களுக்கு அளித்தலே உபாத்தியாயரான எனது கடமை யென்றும் எனது சொந்த

பரிபாகதர்மத்தை அன்னார் மீது சுமத்துதல் முறையல்லவென்றும் நான் நம்புகிறேன்.

2. என் மாணவர்கள் முதுமைப் பருவமெய்துங்கால், அவர்கள் வாழவிருக்கும் நூதனவுலகின் லக்ஷியங்களையும் உண்மைகளையும் தற்போதே நானறிந்து, அவர்கள் கல்விபயிலும் இந்நாளே எனது பாடசாலையை அத்தகைய நூதனவுலகின் சிறியதோர் பிண்டமாக நிருமித்து, அதில் அவர்கள் அவ்வுயர் லக்ஷியங்களையும் உண்மைகளையுமறிந்து பழகி, தங்கள் பிற்காலத்திய தர்மத்தைச் செவ்வனே அனுசரிக்க இந்நாள் முதல் ஆரம்பிக்குமாறு உதவுதலே உபாத்தியாயரான எனது கடமையென்று நான நம்புகிறேன்.

3. என் மாணவர்களின் மனத்தினின்றுபயம் அறவேயொழிந்து, அவர்கள் ஆனந்தம் நிறைந்து, அவ்வானந்தத்தை அன்னார் சூழிடங்களிலெல்லாம்வர்ஷிக்குமாறு நான் என் மாணவர்கட்கு முன் ஆனந்தத்தின் நிதர்சனமாய் நிற்றலே உபாத்தியாயரான எனது கடமையென்று நம்புகிறேன்.

4. என்மாணவர்களிடம் அன்புவளருமாறு அவர்கள் முன் அனபிற்கோர் நிதர்சனமாய் நான் ஆகவேண்டியது உபாத்தியாயரான எனது கடமையென்று நம்புகிறேன்.

5. என் மாணவர்கள், தம்மனோவாக்கு காயங்களில் தூய்மைபெற விருப்பங்கொள்ளுமாறு மனோவாக்கு காயங்களில் தூய்மை பெற்று அன்னார் முன் விளங்குவது உபாத்தியாயரான எனது கடமையென்று நான நம்புகிறேன்.

6. என் மாணவர்கள் தீரத்தன்மையில் விருப்பங்கொள்ளுமாறு தீரமென்னும் குணத்திற் கோர் நிதர்சனமாய் அன்னார் முன் நான் விளங்குதல் உபாத்தியாயரான என் கடமையென்று நான் நம்புகிறேன்.

7. என் மாணவர்கள் ஞானத்தில் விருப்பங்கொள்ளுமாறு ஞானத்திற்கோர்நிதர்சனமாய் அன்னார் முன் நான் விளங்குதல் உபாத்தியாயரான எனது கடமையென்று நான் நம்புகிறேன்.

8. என் மாணவர்களிடம் பொறுமை, விடாமுயற்சி, விவேகம் இவை வளருமாறு பொறுமை, விடாமுயற்சி விவேகம் இவற்றிற்கோர் நிதர்சனமாய் நான் நிற்றல் உபாத்தியாயரான எனது கடமையென்று நான் நம்புகிறேன்.

9. என் மாணவர்கள் மூத்தோரிடம் பக்தியும், தமக்குச் சமானமாயுள்ளோரிடம் அன்பும், தம்மில் இளையாரிடம்

தயையும் காட்டுமாறு, நான் எனக்கு மூத்தோரிடம் பக்தியும், எனக்குச் சமானமாயுள்ளோரிடம் அன்பும், எனக்கு இளையாரிடம் தயையும் காட்டுவதன் மூலமாய் அக்குணங்களுக்கோர் நிதர்சனமாக அன்னார் முன் நான் விளங்குதல் உபாத்தியாயரான எனது கடமையென்று நான் நம்புகிறேன்.

10. என் மாணவர்கள் உத்தம (ஸத்) பிரஜைகளாய் (Citizens) வளருமாறு, நான் ஸத்பிரஜைக்கோர் நிதர்சனமாய் அன்னார் முன் நிற்றல் உபாத்தியாயரான எனது கடமையென்று நான் நம்புகிறேன்.

11. என் மாணவர்கள் அழகிய பொருள்களைக் கண்ணுற்று, ரவித்து, அழகிய விஷயங்களையே விரும்பித் தேடுமாறு அழகிய பொருள்களால் என் மாணவர்களைச் சூழ்வித்தலே உபாத்தியாயரான எனது கடமையென்று நான் நம்புகிறேன்.

12. என் மாணவர்கள் நியாயம், ஸத்தியம், ஆகிய இவற்றில் விருப்பங்கொள்ளுமாறு நியாயம், ஸத்தியம் என்னும் குணங்களுக்கோர் நிதர்சனமாய் நான் விளங்குதல் உபாத்தியாயரான எனது கடமையென்று நான் நம்புகிறேன்.

இவ்விதம் நம்பி இறைவனுக்கும் எனது தாய் நாட்டிற்கும் கல்வித்துறை வாயிலாய்த் தொண்டுபுரிதலே என் வாழ்க்கையின் பிரதான உயர் லக்ஷியமெனக் கொண்டு உழைப்பேனாகவும்!

ஓம் சுபம்.

திருநெல்வேலி ஜில்லா பிராமண ஞான சபைக் கிளைச் சங்கங்களின் காரியதரிசி.	ரா. பஞ்சாபகேசய்யர் கடம்பூர். 8-8-1923.

18107

மேலே காட்டிய பிரதிக்ஞைகள்யாவும், இந்திய வித்தியாவுலகிற்கு நெடுங்காலமாய்ப் பேருதவி புரிந்து வந்திருக்கும் ஸ்ரீமான் ஜி. எஸ். அருண்டேல் துரையவர்களால் தாம் நேரே நடாத்திவந்த "நல்லாசிரியர்கள் சங்க"த்தின் (Fellowship of Teachers) பிரயோஜனார்த்தம் வழங்கப் பெற்றன. இக்கூட்டத்தின் விழாவொன்று 1920ஆ டிசம்பர்மீ அடையாற்றில் சிறப்பாய் நடைபெற்றது 'ஞானோதயம்' பத்திரிகை நேயர்களிற் பலர்க்கு ஞாபகமிருக்கலாம்.

ஷை உயர் லக்ஷியங்களைத் தம் வாழ்க்கைத் துணையாகக் கொண்டு உழைக்கும் உபாத்தியாயர்களின் பாக்கியமே பாக்கியம்!

ரா. ப.

பாரத ஸமாஜம்.

நோக்கங்கள்.

(a) ஹிந்துமதம் நன்கு வேரூன்றிக் கிளைக்கச் செய்தல்; இதற்கு விதிகள் :—

(1) நம் தினசரி வாழ்விற்குப் பிரயோசனமாயிருக்கும்படி, ஹிந்துமத தத்துவங்களின் முக்கியாம்சங்களையே எடுத்துரைப்பது.

(2) சிங்கலையாய் நிறைந்து கிடக்கும் மதாநுஷ்டான கிரியைகளையும் சடங்குகளையும் அழகுறச் சுருக்கி, ஆசாரத்துக்குரிய கர்ம பூஜாவிதானங்கள், நியமங்கள் சிலவற்றைத் திட்டப்படுத்தி, அவற்றை ஸ்வேச்சையாய் ஜனங்கள் அநுசரிக்கச் சாதகஞ்செய்வது.

(3) ஹிந்துக்களாயிருந்து அந்ய மதங்களில் சேர்ந்து இப்போது திரும்பிவர அபிப்ராயம் கொள்கிறவர்களும், ஏற்கெனவே ஹிந்துக்களல்லாதவர்களுள்ளும் பரிசுத்த வாழ்வினர் எனத் தெரியுமானால், அவர்களும் ஹிந்து மதத்திற் சேர விரும்புவரேயாயின் அதற்கு சௌகரியங்கள் செய்வது.

(b) ஹிந்துக்களின் எல்லா ஜாதி வகுப்பாளர்களின் க்ஷேமத்தையும் முன்னேற்றத்தையும் அபிவிருத்தி செய்தல்; இதற்கு வழிகள் :—

(1) ஜாதியென்றும், ஸ்திரீ என்றும், புருஷனென்றும் வெறுங்காரணங் கூறி அதற்காகச் செய்யும் ஜனசமுதாய நிர்ப்பந்தங்களை அகற்றுவது.

(2) பால்ய விவாகம், பருவத்திற்கு முந்தி கர்ப்பாதானம் செய்தல், கணவனை யிழந்தவள் கைம்பெண்ணாகவே யிருந்து காலங்கழிப்பது கட்டாயமெனல், கன்யா சுல்கம், வர சுல்கம் இக்கொடிய வழக்கங்களை அகற்றுவது, அல்லது சீர்திருத்துவது.

(3) பெண்மாப்பிள்ளைகளைத் தேடுவதில் சாஸ்திர சம்மதமல்லாத நிர்ப்பந்தங்களை நீக்கி, வீரியமுள்ள சந்ததியைப் பெறுவதற்கும், வைத்திய சாஸ்திரத்துக்கும் அநுகூலமான முறைகளைக் கைக்கொள்ளுதல்.

(c) ஹிந்துக்களுள்ளும் மற்ற மதஸ்தர்களுள்ளும் சமரஸபாவத்தையும் நல்லெண்ணத்தையும் ஒத்துழைக்கும் தன்மையையும் விருத்தி செய்வது.

ஒப்புக்கொள்ளவேண்டிய தத்துவங்கள்.

(i) கீழ்க் கண்டபடி ஹிந்துமத தத்துவ சாஸ்திரக் கொள்கைகளை நான் தடையன்றி முழுதும் நம்புகிறேன்:—

(a) எல்லாவற்றுக்கும் ஆதியான பரம்பொருள் ஒன்று எங்கும் நிறைந்தும் எல்லாவற்றுக்கும் அதீதமாயும் இருக்கிறது.

(b) நாம் பரிபூர்ணதையை நோக்கி அபிவிருத்தியடைந்துகொண்டே போவது, நம் ஜகத்துக்கு நாதனாகிய ஈசுவரனுடைய ஸங்கல்பம்.

(c) அவருடைய தைவீபிரகிருதியின் விளக்கமாகிய பிரபஞ்ச நியதிகளின்படி அவர் சங்கற்பத்தை நிறைவேற்றும தேவரிஷி கணங்கள் படிப்படியான பக்குவ நிலைகளில் உளர்.

(d) ஆத்ம பரிபாகம் புனர்ஜன்மம் கர்மம் என்ற நியதிகளால் ஒழுங்குபெற்றுச் செல்கிறது.

(e) மனித குலமனைத்தும் ஒன்றே. மொத்தமாய் அதன் க்ஷேமத்திற்குரிய விஷயங்களும் ஸாராம்சத்தில் எல்லாம் ஒன்றே.

ii இதர ஜீவர்களின் க்ஷேமத்தை அபிவிருத்தி செய்யக்கருத்தோடு உழைப்பதே வாழ்வின் உண்மையான இலக்ஷியம். நான் சம்பந்தமான வரையில் என்னாலானமட்டும் அந்த இலக்ஷியத்தை நிறைவேற்ற முயலுவேன்.

iii என் திநசரி வாழ்வில் மனோ வாக்குக் காயங்களென்னும் திரிகரண பூர்வமான ஆசரணைகளிலும், என் சரீரம், உடை, இருப்பிடங்களிலும், ஸ்திரீ புருஷப் பழக்கங்களிலும் சுத்தத்தையே கைக்கொள்வதோடு, மதுமாம்ஸங்களையும் லாகிரி வஸ்துக்களையும் கண்டிப்பாய் ஒழிப்பேன்.

iv ஸமாஜத்தின் நோக்கங்களில் எனக்கு ஸர்வ ஸம்மதம் உள்ளது. என்னாலியன்றமட்டும் அவைகளை நிறைவேற்றுதற்கு ஒத்துழைக்கவும் சம்மதிக்கிறேன்.

இவ்வாறாக உறுதி கூறுகிறேன்.

உத்தியோகஸ்தர்கள்

அக்ராஸனர் : தி. ராமசந்திர ராவ், பி.ஏ., பி.எல்., மாஜி ஸப் ஜட்ஜ், அடையாறு.

உபஅக்ராஸனர் : திவான் பகதூர் கே. யஸ். சந்திரசேகர ஐயர், பி. ஏ., பி., எல். சீப் ஜட்ஜ், மைசூர்.

காரியதரிசி : வி. சுப்பராமையா அவர்கள் காரியதரிசி, அடையாறு, மதராஸ்.

மூலஸ்தானம் : பிரஹ்மஜ்ஞான சபை, அடையாறு, மதராஸ்.

குறிப்பு :—இதன் விஷயமாக வேண்டிய விவரங்களுக்கு காரியதரிசி யவர்களுக்கு எழுதிக் கேட்கலாம். (ப-ர்.)

பத்திராதிபர் குறிப்புக்கள்.

தென் தமிழ் ஜில்லாக்களிலும் ஸிம்ஹலத்தீவிலும் உள்ள பிரஹ்ம ஞான சங்கங்களின் 'பிடரேஷன்' கூட்டமானது சென்ற மாதம் 17, 18ம் தேதிகளில் ராமநாதபுரம் ஜில்லா சிவகங்கையில் கூடிற்று. அக்கூட்டத்திற்கு விஜயம் செய்த பற்பல பிரஹ்ம ஞான கிளைச்சங்கங்களின் பிரதிநிதிகளின் சௌகரியங்களைக்கவனிக்கவும் அவர்களைத் தக்கவாறு உபசரிக்கவும் சிவகங்கை கிளைச்சங்கத்தார் செய்த ஏற்பாடுகள் சிலாக்கியமாயிருந்தன. அக்கூட்டத்தின் அக்கிராஸனம் டாக்டர் ஜேம்ஸ் எச் கஸின்ஸ் என்ற, நமது கியாதிபெற்ற பிரிய சகோதரரால் வகிக்கப்பட்டது. அக்கூட்டத்திற்கு அடையாறு, திரிசிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, ராமநாதபுரம், கடம்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி முதலிய ஊர்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். வடமொழியிலும் தமிழிலும் ஸ்தோத்திரங்களும் பாடல்களும் சிறுவர்களால் பாடப்பட்ட பிறகு, அக்கிராஸனாதிபதியவர்களுக்கு உபசரிப்புப் பத்திரம் சிவகங்கை காரியதரிசியாகிய சகோதரர் A. R. ரங்கஸ்வாமி அய்யரவர்களால் வாசிக்கப்பட்டது.

* • *

அதன் பிறகு "சகோதரபாவத்தைப் பற்றியும் அதை அடையும் வழியைப் பற்றியும்" அக்கிராஸனாதிபதியவர்கள் விஸ்தாரமாகவும் இனிமையாகவும் ஆங்கிலத்தில் பிரஸங்கித்தார். மாஜி சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜ் சகோதரர் ஸர். டி. சதாசிவய்யர

வர்கள் 'ஹிந்து மதத்தில் சகோதரபாவம் எவ்வாறு உள்து' என்ற விஷயத்தைப்பற்றி எடுத்துப்பேசினர். தவிரவும் முதல் நாளில் உதயநக்ஷத்திர சங்கமும் கூடிற்று. மறுநாள் தூத்துக்குடி சப்ஜட்ஜ் சகோதரர் C. V. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் 'பாரமார்த்திகத்தை விரும்புவோருக்கு' உரிய விஷயங்களைப்பற்றி விநோதமாயும் மனோரம்மியமாயும் ஆங்கிலத்தில் பேசினார். கடம்பூர் சகோதரர் R. பஞ்சாபகேசய்யரவர்கள் 'பிரஹ்மஞானசங்கம் பிரஹ்மஞான இயக்கம்' என்ற விஷயத்தைப்பற்றியும் சிவகங்கை சகோதரர் P. N. சங்கர நாராயணய்யரவர்கள் 'ஸேவை' யைப்பற்றியும் மதுரை சகோதரர் M. S. சுந்தரசர்மா அவர்கள் 'கலை' யைப்பற்றியும் உபந்நியாஸம் செய்தார்கள்.

* * *

Mrs. கஸின்ஸ் சீமாட்டியவர்கள் சிவகங்கையில் ஸ்திரீகளது மீட்டிங்கு ஒன்று ஏற்படுத்தி அதை சிறப்பாய் நடத்தினார்கள். தவிரவும் 'பிடரேஷன்' மீட்டிங்கிலும் ஸ்திரீகளின் முன்னேற்றத்தைப்பற்றிப் பேசினார்கள். Mr. கஸின்ஸ் அவர்களும் பிடரேஷன் முடிவில் உபந்நியாஸம் செய்து கூட்டத்தை ஸமாப்தி செய்ததுமன்றி 19உ காலையில் அவ்வூர் மாணவர்களுக்கு 'இக்காலத்தின் நெருக்கடி முதலியவை'களைப்பற்றி உபந்நியாஸம் செய்தனர். இப்பிடரேஷன் கூட்டமானது சிவகங்கை வாஸிகளுக்கு பிரஹ்மஞான விஷயத்திலும் பொது ஜன பிரவிர்த்திகளிலும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வெகு விமரிசையாய் நடைபெற்றது. அதற்குப் பெரும்பாலும் அக்கிராஸனாதிபதியவர்களும் அவருடைய மனைவியும் அவர்களுடைய பிரஹ்மஞான சிரத்தையாலும் உற்சாகத்தாலும் உயர்தர மனோபாவத்தாலும் உதவி புரிந்தனர்.

ஏ. ரங்கஸ்வாமி அய்யர்

சமாசாரம்

அடையாற்றில் பிரஹ்மஜ்ஞான சபையின் 48-ஆம் வருஷோத்ஸவம்:—சென்றமீ 17தேதி காலை சபாமண்டபம் அழகாய அலங்கரிக்கப் பெற்று அடையாற்று வாசிகள் அனைவரும் கூடினர். டாக்டர் அன்னை வஸந்தை அவர்கள் அக்ராசனம் வகித்தனர். பிஷப் லெட்பீடரவர்களிடமிருந்து களிகூற்றுச்

செய்தியானது கேபிள்கிராம் மூலமாய் கிடைக்கப்பெற்றது. மகா-ா-ா-ஸ்ரீ எ. கே. ஸீதாராமசாஸ்திரியார் அவர்கள் ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரமொன்று அழகாய்ச் சொன்னதும், பிரஹ்மஜ்ஞானத்தால் மதங்கள் தெளிவுறுவதெவ்வாறு என்பதை ஸ்ரீ ஜே. ஆர். ஆரியா அவர்களும், பிரஹ்மஜ்ஞானத்தால் பௌத்த சாஸ்திரம் தெளிவுறுகிற தெவ்வாறென்பதை ஸ்ரீ யன். யஸ். ராமராவ் பி. எ. அவர்களும், ஜனஸமுதாயச் சீர்திருத்த விஷயமாய் பிரஹ்மஜ்ஞானம் தெளிவிப்பதை ஸ்ரீ எஸ். ராஜாராமையரவர்களும், பிரஹ்மஜ்ஞானத்தால் ராஜதர்மம் எவ்வாறு சீர்பெறும் என்பதை ஸ்ரீ யதுநந்தன பிரஸாத் அவர்களும், கல்வி முறையைச் சீர்திருத்த பிரஹ்மஜ்ஞானம் எவ்வாறு உதவுகிறதென்பதை ஸ்ரீ ஜி. எஸ். அருண்டேல் யம். எ. எல். எல். பி. அவர்களும் ஐவைந்து நிமிஷம் பேசினர். அக்ராஸனர் முடிவுரை வருமாறு. "நமது சபையின் ஆரம்ப காலங்களில், நமது சபையின் ஸ்தாபகர்கள் சொல்லிய தென்னவெனில் உலக ரக்ஷகர்களாகிய பரமரிஷிகள் உளரென்பதே. அடுத்தபடியாக பிளவட்ஸ்கீ அம்மையார் அந்தரங்க சபையை ஏற்படுத்தி, அதன்மூலமாய் மஹரிஷிகளாகிய குருதேவர்களை யடையலாமென்று நம்பினவர்களை, அதில் சேர்த்துக்கொண்டார். ஆனால் பொதுச்சபையிலுள்ள அங்கத்தினர்களுள் அபிப்பிராயபேதத்துக்கு எப்போதும் இடமுண்டு. சபைக்கு நான் அக்ராஸனத்துக்கு வந்ததும் நானும் அவ்வாறே செய்து வந்திருக்கின்றனன். ஆரும் கிளேச்சாதி உற்பவித்து வரும் இக்காலத்தில், ஸநாதனஞானத்தைப் புதிய வழியில் எடுத்துரைத்து, உலகத்தைப் புதிதாய்த்திருத்தி அமைக்க வேண்டிய ஜகத்குருவை இத்தருணத்தில் நாம வரவெதிர்பார்த்திருப்பதே நம் கடமையாகும். வருங்காலத்தில் பிரபலமாகக்கூடிய மதங்களுக்கெல்லாம் பிரஹ்மஜ்ஞானசபையே மூலைக் கல்லாக அமைவுறும் என்பதாகச் சொல்லக்கேட்டிருக்கிறோம். ஆகையால் அதை லோககுருவானவர் கையாளும்படி பாதுகாக்கவேண்டும். அவர் மூலமாய்ப் புதியநாகரிகம் ஏற்படும், அப்போது ஜனஸமுதாய ராஜகீயப் பிரவர்த்திகள் யாவும் சோதரவொற்றுமையை ஆதாரமாகக்கொண்டு நிகழும். எல்லாத்தேசங்களும் நலம் பெறும்".

தஞ்சாவூரிலும் இத்திருவிழா கொண்டாடப்பட்டது. ஸ்ரீ டி. வி. கோபாலஸ்வாமி ஐயரவர்களும், எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரிகளவர்களும் பிரஹ்மஜ்ஞான ஸபையின் சரித்திர வரலாற்றை எடுத்துரைத்தனர். பொதுஜனங்கள் அநேகர்

வந்திருந்தனர். பழங்கள் விநியோகம் செய்யப்பெற்றதும் சபை முடிவுற்றது.

ஸர்வசமய சமரஸ மஹாஸபைக் கூட்டம் இத்தகையது ஒன்று சென்னை திருவட்டீசுவரன் பேட்டையில் உள்ள ஸ்ரீ ஸச்சிதானந்த ஸங்கத்தின் ஆதரவின் மேல் வருகிற கிரிஸ்ட்மஸ் வாரத்தில் நடக்கும். அதில் ஹிந்து, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ, பாரஸீ மதங்களும், ஜைனமதமும், பிரஹ்மஸமாஜமும், சைவஸித்தாந்தம், வீரசைவம், தாந்த்ரிகமதம், பிரஹ்மஜ்ஞான தரிசனம் ஆகிய இவைகளும் அதனதன் பிரதிநிதிகளால் எடுத்து விவரிக்கப்படும். இடம் கிடைத்தல் அரிதாயிருக்குமாகையால், 19, பங்காருநாயக்கன் தெரு, மவுண்ட் ரோட் போஸ்டு, சென்னை, என்ற விலாசத்திற்கு கௌரவ காரியதரிசிகளுக்கு ஸ்டாம்பு ஒட்டிய கவர் அனுப்பி டிக்கெட்டு கேட்டால் இனாமாக டிக்கெட்டு கிடைக்கலாம். இதற்குச் சுமார் ரூ 2000 செலவுக்குத் தேவையாம். திவான் பஹதூர் ஸர். து. ஸதாசிவ ஐயரவர்கள் முதலியவர்கள் இதற்குப் பரிபாலகர்கள்.

வாலிபர்களின் பிரஹ்மஜ்ஞான இயக்கம் :--இச்சங்கங்கள், திருவல்லிக்கேணி, சிந்தாத்திரிப்பேட்டை, கண்ணனூர் முதலிய இடங்களில் ஏற்பட்டிருக்கின்றன. சென்ற மீ 17உ வாலிப பிரஹ்மஜ்ஞானிகளின் பிடரேஷன் ஒன்று ஏற்படுத்துவதன் அவசியத்தை, அடையாற்று வாலிப பிரஹ்மஜ்ஞான சங்கக் காரியதரிசியாகிய ஸ்ரீ கெ. டஸ். செல்வாங்கர் சென்னை வாலிப இந்தியச் சங்கத்தில் பேசினர். டாக்டர் அன்னிபெஸந்தை அவர்கள் தம் அபிப்ராயம் கூறியபோது இத்தகைய பிரஹ்மஜ்ஞான வாலிப ஸமாஜம் இந்தியா முழுமைக்கும் பொதுவாக ஒன்று ஏற்படுதல் வேண்டுமென்றும், அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளலாமா அல்லவா என்பதை வாலிபர்கள் தாமாகவே தீர்மானித்துக் கொள்ளவேண்டுமென்றும் வாலிபர்கள் தம் காரியங்களை தாமே பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினர். ஸ்ரீமான் ஜி. எஸ். அருண்டேல் அவர்கள் இவ்வியக்கத்தில் மிகவும் சந்தோஷிப்பதாகக் கூறி, அவர்களை உத்ஸாஹப்படுத்தினர். பிறகு அவர்கள் விலகியதும் ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன் அவர்களை அக்ராஸனராக அமர்த்தி, மேற்படி விஷயத்தை விவகரித்துச் செய்த தீர்மானங்கள் பின்வருமாறு ;—

1. தென்னிந்திய வாலிபச் சங்கங்கள் எல்லாம் சேர்ந்து, தென்னிந்தியா வாலிப பிரஹ்மஜ்ஞானிகளின் மஹா ஸங்கம் என்பதாகும்.

2. அதன் பரிபாலன சபைக்கு, ஒவ்வொரு வாலிபக் கிளைச் சபையின் பிரசிடெண்டும், காரியதரிசியும் பிரதிநிதிகளாவர்.

ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமேனன் மஹா சங்கத் தலைவராகவும், ஸ்ரீ கே. யஸ். செல்வாங்கர் தற்காலக் காரியதரிசியாகவும் நியமிக்கப் பெற்றனர்.

கடைசியில் டாக்டர் அன்னை வஸந்தை யவர்களுக்கு மனமார்ந்த வந்தனங் கூறி, ஐரோப்பிய ஆஸ்டிரேலிய பிரஹ்மஜ்ஞான வாலிபச் சோதரர்களுக்கு தமது அன்பை வெளியிட்டுச் சபையை முடித்தார்கள்.

ஸர்வஜன ஸஹோதரத்துவ விஜயம்:—மதுரை பிரஹ்மஜ்ஞான ஸபையைச் சேர்ந்த ஸ்ரீமான் யம். யஸ். சுந்தர சர்மா பி. ஏ. அவர்கள் சித்திரக் கலையில் வல்லவர். அம்பாசமுத்திரத்தில் "ஓர் தேசத்திற்கு கலைகளின் சிறப்பு எவ்வளவென்பதையும் "கலையும் சோதரபாவமும்" என்பதையும் பேசி, மற்றோர் உபந்யாஸத்தில் தென்னிந்தியக் கலைத்தொழிற் பெருமையை படக் காட்சியால் விளக்கிக் காட்டினர். மாணவர்களும் மற்றவர்களும் வெகுவாய்த் திரண்டு வந்திருந்து களிப்புற்றனர்.

பெங்களூரில் இம்முயற்சி நிகழ்ந்ததைப்பற்றி ஸ்ரீமான் யன். பி. சுப்பிரமண்ய ஐயர் கூறுகிறார்:—'இப்பிரசாரக முயற்சியைப்பற்றி சாமானியமாகச் சனங்கள் தம் பேச்சுக்களில் பிரஸ்தாபித்துக் கொள்கிறார்கள். அம்மட்டிலேயே ஓர் விழிப்பு உண்டாகி யிருக்கிறதென்பது நிச்சயம். பெங்களூர் நகர், பாளையம், மல்லேசுவரம் இவ்விடங்களில் பற்பல பாஷைகளில், சோதரத்துவத்தின் மூதன் மாதத்திய நான்கு அம்சங்களையும் விவரித்து உபந்யசிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயிரக் கணக்கான நோட்டீசுகள் அச்சிட்டு விளம்பரம் செய்யப்பட்டது. பாளையத்தில் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு பிரஹ்மஜ்ஞான விஷயத்தைப்பற்றி சம்பாஷிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

PRINTED AT THE BESANT PRESS, MADRAS.

18101

‘தியசாபிகல் சொஸைட்டி’ என்னும் பிரம்மஞ்ஞான சபை

இது 1875ஆம் நவம்பர்மீ 17உ அமெரிக்காவிலுள்ள நியூ யார்க்கு நகரில் ஏற்பட்டுச் சென்னை அடையாற்றில் நிலை பெற்றிருக்கிறது. சமரசபுத்தியோடு தத்துவ ஆராய்ச்சிக்கு ஒன்று சேருவோர்களின் சங்கம் இது. ஆதலால் இச்சங்கத்தார் நாஸ்திகத்தைக் கண்டித்து ஆஸ்திகபுத்தியை வளர்த்து மனிதவர்க்கத்திற்கு ஞான வழியில் உபகரிப்பவர்கள் ஆவர். இதன் முக்கியகொள்கைகள் மூன்று :—

(1) ஜாதி, மதம், வர்ணம், வகுப்பு, ஆண், பெண் இப் பேதங்களின்றி ஸர்வஜன சோதரபாவம் உலகில் நிலைபெறச் சாதகமாயிருத்தல்.

(2) வெவ்வேறான மதம், தத்துவசாஸ்திரம் பௌதிக சாஸ்திரங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வதை ஆதரித்தல்.

(3) மனிதனிடத்தடங்கியுள்ள சக்திகளையும் நமக்கு விவரந் தெரியவாராத பிரபஞ்சநியதிகளையும் பரிசீலனஞ் செய்வது.

பிரம்மஞ்ஞான சபையில் சேருகிறவர்கள் எம்மதத்தாராகவும் இருக்கலாம் அல்லது ஒரு மதத்தையும் அங்கீகரிக்காதவராகவும் இருக்கலாம். ஆனால் மேற்படி நோக்கங்களை ஒப்புக்கொண்டும், மத துவேஷங்களை ஒழித்து நல்லெண்ணமுள்ளவர்களாயிருந்து கொண்டு தங்கள் மத அபிப்பிராயங்கள் எப்படியிருப்பினும் மதவுண்மைகளைப் படித்து மற்றவர்களோடு தங்கள் படிப்பைக் கலந்துகொள்ள விரும்பும் படிப்பாளிகள் இச்சங்கத்தில் ஒருங்கு சேருகிறார்கள். அவர்கள் ஒற்றுமைக்கு ஒரே பொது நம்பிக்கை காரணமல்ல ; தத்துவத்தைக் கண்டறியும் ஒரே லக்ஷியத்தோடு அவர்கள் ஒருங்கே முயற்சிப்பது தான் காரணம்.

பரிசுத்த வாழ்விலும் உயர்லக்ஷியங்களைச் சிரத்தையாய்ப் பின்பற்றுவதாலுமே தத்துவத்தைத்தெரிந்து கொள்ளலாம் என்பது அவர்கள் சித்தாந்தம். தத்துவமானது வருந்தித்தேடி

முயற்சியால் பெறும் பரிசாகுமேயன்றிப் பிறரை பலவந்தப் படுத்தி ஒப்புக்கொள்ளச் செய்வது ஆகாது. ஒவ்வொருவரும் தத்தம் படிப்பினுலோ உள்ளுணர்வாலோ விஷயங்களைத் தெரிந்து கொண்ட பிறகு நம்பவேண்டுமே யன்றி, பிரமாணமெனக் கேட்டமாத்திரத்தில் நம்பலாகாது. துவேஷிகளிடத்திலும் பொறுமையாயிருத்தல் தங்கள் கடமையென அவர்கள் தெரிந்து செய்கிறார்கள். அறிவீனர்களுக்கு அவர்கள் போதிப்பார்களே யொழிய அவர்களைத் தண்டிக்கார்கள். ஒவ்வொருமதமும் பிரஹ்ம ஞானத்தின் ஓர் தோற்றமே என்பதை யவர்கள் அறிந்து கொண்டவர்களாகையால் அதைத் தூஷிப்பதைவிட்டுப் படிப்பதே மேலெனக் கொள்கிறார்கள். அதற்குப் பிறரைச் சேர்க்க முயலுவதை விட்டு அதன் கருத்துக்களை எவரும் அப்பியசித்தால் போதும் என்றெண்ணுகிறார்கள். **ஸத்தியமே** அவர்கள் இலக்ஷியம். **சாந்தியே** அவர்களுடைய ஞாபகமொழி.

பிரஹ்மஞானமென்பது எல்லா மதங்களுக்கும் ஆதாரமான உ[illegible]மைகள் அடங்கியதாகும். அதை எம்மதமும் தனக்கே உரித்தெனக் கொள்ளுதல் முடியாது. அதன் தத்துவசாஸ்திரமுறையால் உலகவாழ்க்கை நமக்கு நன்கு தெளிவாகிறது. இவ்வுலகத்தின் விகாஸமுறையை நடத்திவரும் அன்பும் நடுநிலைமையும் இத்தன்மையன வென்று நிரூபணமாகின்றன. ஓய்வு ஒழிதல் இல்லாத ஜீவயாத்திரையில், மரணமானது அடிக்கடி நேரும் சாதாரண சம்பவம். அதன் பிறகு ஜீவன் இன்னும் பூர்ணமும் பிரகாசமுமான வாழ்வெய்துகிறான். ஆத்துமாவே மனிதன், மனமும் மெய்யும் அவன் கருவிகள். இவ்வுண்மைகளை மனிதனுக்குணர்த்தி அதனால் ஆத்தும வித்தையை உலகில் தழைக்கச்செய்கிறது. மதக் கொள்கைகளுக்கு இரகசியார்த்தங்களை விளக்கி மதக்கிரந்தங்களைத் தெளிவுறச் செய்வதனால் மனிதர் தம் உள்ளுணர்வால் உண்மையெனத் தெரிந்து கொண்டவைகளை விவேகத்திற்கிணங்கவும் ருசுப்படுத்துகிறது பிரஹ்மஜ்ஞானம்.

பிரம்மஞ்ஞான சபை அங்கத்தினர்கள் இவ்வுண்மைகளைப் படிக்கிறார்கள். பிரம்மஞ்ஞானிகள் இவற்றை யநுஷ்டிக்கிறார்கள். படிக்கவும், பொறுமை பாராட்டவும், உயர்லக்ஷியங்களுக்காக இடைவிடாமல் முயலவும் சித்தமுடையவர் எவரும் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். பிரம்மஞ்ஞானியாதல் அவ்வவ்வங்கத்தினரின் முயற்சியைப் பொருத்தது.